



# செந்தூரம்

## பரிசளிப்பு விழா சிறப்புமலர்

## 2011–2012

### தி/ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம்

### இலிங்கநகர்–திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தூரம்

## பரிசளிப்பு விழா
## சிறப்பு மலர்

2011 – 2012

தி/ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம்

இலிங்கநகர், திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட வாசகம்

கல்வி, ஒழுக்கம், அர்ப்பணிப்பு

## தூரநோக்கு

அனைத்து சவால்களையும் தாண்டி
கல்வியில் தேர்ச்சி பெற்ற
உயர் ஒழுக்க சமூகம்

## பணிக்கூற்று

அனுபவத் தேர்ச்சியோடு கூடிய
அறிவினை வழங்கிய
உயரிய சிந்தனையோடு வளமான
வாழ்க்கைக்கான விஞ்ஞானக்
கலையினைப் பெற்றுக்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



திருக்கோணமலை இலிங்கநகரில் அமைந்துள்ள ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம் "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பதை காலம் அறிந்து, கற்பவை கசடறக் கற்பித்து மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கி வருவது போற்றுதற்குரியது.

எதிர்வரும் யூலை மாதம் பரிசளிப்பு விழாவையும் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட இருப்பது சிறந்த பணியாகும்.

தற்போது அதிபராக பணியுரியும் திரு. க. யோகானந்தன் அவர்கள் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக மேற்படி மகாவித்தியாலயத்தில் "கேடில் விழுச் செல்வம்" கல்விதான் என்பதை உணர்ந்து அறிவை ஊட்டி வருகிறார்.

இவரது அயராத உழைப்பும் ஆற்றுதலும், ஆளுமையும் இம் மகாவித்தியாலயம் மென்மேலும் வளர உறுதுணையாக இருக்கும்.

இவை எல்லாவற்றிற்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள் கீழேவிருக்கும். பரிசளிப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
வேதாகமமாமணி
சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கிழக்கிலங்கையின் திருக்கோணமலை நகரில் மூவினங்களும் கலந்து வாழும் இலிங்க நகரை கல்வியால் அழகு படுத்தும் ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம் 1977 இல் தோற்றம் பெற்று கல்வி வளர்ச்சியில் ஏறுமுகம் கொண்டு விளங்கி வருவது பாராட்டுக்குரியது.

"ஆலயங்களும் அன்னசத்திரங்களும் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஏழைகளுக்கு எழுத்தறிவித்தல் மேலான புண்ணியம்" என்று பாடினார் மகாகவி பாரதியார். அதன்படி கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலிங்கநகரில் மூவின மக்களின் குடியமர்வு, குடிசன அடர்த்தி வாழ்வாதாரம் போன்ற இன்றியமையாத தேவைகளுக்கிடையில் அம்மக்களிடையே கல்வித் தேவையின் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு அங்கு ஒரு பாடசாலை அமைய வித்திட்ட அதன் நிறுவனரான திரு.எஸ்.இராமசாமி அவர்களையும் அதன் முதல் அதிபராக செயற்பட்ட எஸ்.சுப்பிரமணியம் அவர்களையும் இங்கு நினைவு கூர்ந்து பாராட்டுவது பொருத்தமானது என எண்ணுகிறேன்.

இப்போது இப்பாடசாலையானது துரிதவளர்ச்சி பெற்று, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மாணவ மாணவியர் 300 பேரை உள்வாங்கி கல்விச் சமூகத்திற்கேயுரிய ஒழுக்கம், பண்பாடு, இனமத நல்லிணக்கம் போன்றவைகள் வளர ஒரு முன்னுதாரணம் போல விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இவற்றிக்காக முன்னின்று உழைத்த, உழைக்கின்ற ஆசிரியப் பெருந்தகைகளையும், அவர்களுக்கு தகுந்த ஒத்துழைப்பை நல்கிவரும் பெற்றோரையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

அத்துடன் ஆண்டுதோறும் இங்கு எமது மறையின் ஆகமகாலத்தில் நடந்தேறும் கிறிஸ்தோயத்திற்கு கட்டியம் கூறும் ஒளிவிழாவானது. இப்பாடசாலையிலும் இடம் பெற்று வருவது குறித்து பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. உண்மையில் சமாதானம் என்பது இவர்களின் ஒன்றிணைவிலிருந்தே ஆரம்பமாகிறது என்பதற்கு இந்த கள்ளங்கபடமற்ற பிஞ்சு உள்ளங்களின் சங்கமிப்பே சிறந்த உதாரணங்களாகும். சமாதானமென்பது யுத்த வெற்றியும் அதன் கொண்டாட்டங்களிலும் அல்ல, சக மனிதரை மதிப்பதிலும் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழ்வதிலுமே உள்ளது என்பது ஒரு பாடமாக மாணவர் சமூகத்திற்கு புகட்டப்பட வேண்டும்.

இம்மலருக்கு ஓர் ஆசிச் செய்தியினை எழுத எனக்கு வாய்ப்பளித்துக் கௌரவித்த இம் மகாவித்தியாலய அதிபர்.க.கோகானந்தன் அவர்களுக்கும் பாடசாலை சமூகத்தினருக்கும், நன்றி கூறுகின்றேன். இவர்களது அயராத சேவைகள் நல்ல அறுவடையை பெற்றுத்தர எனது நல்லாசிகள். இறையாசி அனைவர் மீதும் என்றும் பொழியப்படுவதாக.

இவ்வண்ணம்
இறையன்புச் சேவையில்
யோசப். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை
மறைமாவட்ட ஆயர், திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

வினைத்திறன் மிக்க எதிர்கால சந்ததியை உருவாக்குவதில் சமூக நிறுவனங்கள் பல பங்கேற்கின்றன. இவற்றுள் பாடசாலைகளுக்கு பிரதான வகிபாகம் இருக்கிறது. ஒரு மாணவன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதாக வழிநடத்துவது பாடசாலைகளின் பொறுப்பாகும்.

அந்த வகையில் கடந்த பல வருடங்களாக தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம் இந்து மாணவர்களையும், முஸ்லிம் மாணவர்களையும் கல்வி புகட்டி பண்பாடான மாணவர் பரம்பரையை உருவாக்கி பெரும் பங்காற்றி வருகின்றமை பெருமையுடன் நினைவு கூர வேண்டிய விடயமாகும்.

மாணவர்களின் வெளிக்களச் செயற்பாடுகள் மாணவரின் கல்வி, பண்பாடு மற்றும் மனப்பாங்கு ரீதியில் வளர்ச்சியை ஏற்படுத்தி ஆளுமைகளாக உருவாக துணை புரிகிறது என்ற வகையில் இவ்வருடம் மாணவர்களின் ஆக்கங்களைத் தழுவி "செந்தூரம்" என்ற பெயர் தாங்கி சஞ்சிகையொன்று வெளிவருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இச்சஞ்சிகை வெளிவர பங்காற்றிய மாணவர்களும் ஆசிரியர்களும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். அத்தோடு இச் சஞ்சிகைக்கு ஓர் ஆசிச் செய்தியை எழுதித் தருமாறு என்னிடம் கேட்டமை மனதுக்கு புகழ்ச்சியளிப்பதுடன், சமூகம் எதிர்பார்க்கப்படும் வெற்றியின் தலைமுறையான மாறி எமது சமூக முன்னேற்றத்துக்கு பங்காற்றி வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இறைவனிடம் கையேந்தி பிரார்த்திக்கின்றேன்.

பிரதம கதீப்<br>
அல் தக்வா ஜூம்மா பள்ளி (லிங்கநகர்)<br>
மௌலவி **A. M.** முனாஸ் (ரஷிரி)<br>
இலிங்கநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation Message



I am extremely happy to sending to this message on the occasion of the annual awarding ceremony and launching magazine of **T/Sri Konalinga Maha Vidayalam , Linganagar , Trincomalee.**

I have come to know that the Principal and teachers have worked very hard to uplift the standard of education and achieved education goals. The School has Produced Commendable public examination achievements in the G.C.E Ordinary level examination, G.C.E Advanced level examination and Grade 5 Scholarship examination Consequently, the school has also won several awards in athletic and games in Zonal, Provincial and national level and let the School into many victories. These achievements have been highly appreciated by all.

I congratulate the Principal and his staff for their commitment, dedication, loyalty and joint efforts towards the development of school as a strong team for the betterment of children in this region.

**N.A.A. Pushpakumara,**

**Secretary,**
**Ministry of Education, Cultural Affairs, Land**
**&Land Administration Transport Authority,**
**Eastern Province.**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஒரு பாடசாலையின் வெற்றி என்பது தனியே கற்றல், கற்பித்தல் சார்ந்ததாக மட்டும் இருக்க முடியாது. இதைவிட இணைப்பாட முயற்சியின் பால் மாணவர்களை கொண்டு செல்வதும் முக்கியமானதாகும். புதிய சிந்தனைகளையும், எண்ணக்கருக்களையும் உள்ளங்களில் ஊடாகச் செய்வது பாடசாலைகளின் பாரிய பொறுப்பாகும். மனிதனுடைய எண்ணங்களைச் சுமந்து செல்லும் வாகனமாக மொழியினை மொழியியலாளர்கள் குறித்துக் காட்டுகின்றார்கள். தாய் மொழிச் சிந்தனைகளையும் ஏனைய மொழிகளின் வகிபாகங்களையும் அனைவரும் உணர்ந்து கொள்வது சாலப் பொருத்தமாகும்.

அந்தவகையில் இலிங்கநகர் தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம் எடுத்துக்கொண்ட முயற்சி மெச்சத்தக்கதாகும். இங்கு மூன்று மத கலாசாரங்களையும் பின்பற்றும் மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒருவருடைய மத விழுமியங்களை இன்னொரு மதத்தினர் கவர்ந்து செல்வது அல்லது அனுசரித்து செல்லும் போது பரஸ்பரம், புரிந்துணர்வு ஏற்பட்டுவிடுகின்றது. "பரிசளிப்பு விழா" என்பது வெறுமனே கேளிக்கையாக மட்டும் அமையாது மாணவர்களுக்கு உந்துதலாக மாறும் போது தான் பாடசாலை முழு வெற்றியை பெறமுடியும். இம்முறையிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மலர்க்குழுவினரைப் பாராட்டுகின்றோன். முயற்சிகள் தொடர வாழ்த்துக்களை உளமாரத் தெரிவித்துக் கொள்கின்றோன்.

ஜனாப் **M.T.A.** நிஸாம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக்கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



"இன் நறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

'என்ற முப்பெரும் கவிஞர்களுள் மிளிரும் மகாகவி பாரதியாரின் வைரவரிகளுக்கு ஏற்ப திருக்கோணமலை நகரின் கண்ணே பாரம்பரிய பண்பாட்டினையும் சமய விழுமியங்களையும் நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலய பரிசளிப்புவிழா மலர் செந்தூரத்தில் எனது வாழ்த்துச் செய்தியும் உட்கார இடம் கிடைத்ததில் அகமகிழ்கின்றேன்.

பாடசாலை என்பது சமூகத்தின் மையம் "மனிதவள மேம்பாட்டிற்கான ஒரு தளம்" சிறப்பான கல்வியை வழங்குவதில் முன்னுரிமையை வளர்ப்பது பாடசாலை "இலக்கை அடையும்வரை உழைமின்" என்னும் விவேகானந்தரின் கூற்றிற்கிணங்க மாணவர்களின் கல்வியில் மட்டுமல்லாமல் ஒழுக்கத்திலும் சமூக நற்பண்புகளிலும் உயர்ந்து விளங்கவேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு அரும் பெரும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது இவ் வித்தியாலயம்.

கல்வியை வழங்குதல் மாத்திரமே ஒரு பாடசாலையின் பணியாக இருந்துவிடக்கூடாது. தான் நிற்கும் சமூகத்தின் கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களைச் செப்பனிடுவதும் மேம்படுத்துவதும் பாடசாலையே. இத்தகைய சமூக நோக்கங்களுடன் இயங்கும் பாடசாலைகள் இன்று சமூகம் தனது அறிவை வளர்க்கவும், சிந்தனையை விருத்தி செய்யவும், பண்பாட்டு செழுமையை வெளிப்படுத்தவும் பாடசாலைகளே காரணமாகவும், அடித்தளமாகவும் காணப்படுகின்றன.

பெற்ற அறிவைப் பிரயோகித்தல் என்பது கற்றலின் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அவ்வகையில் மாணவர்களின் தேசியமட்டத்தையும் சிறந்த கற்றல் அனுபவங்களையும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றன. எனவே எல்லா மாணவர்களும் அதனைப் பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்வதுடன் தாம் வாழும் சமூகத்தையும் வழிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எனவே இப்பாடசாலையின் வளர்ச்சிப் படியில் பங்காற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகளை மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி. சசிதேவி ஜலதீபன்
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம் (பட்டின/சூழலும்)
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருக்கோணமலை கல்வி வலயத்தில் அமைந்துள்ள தி/ஸ்ரீகோணலிங்க மகா வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பாடுகளில் ஒன்றாக பாடசாலை நிருவாகம், சமூகம், மாணவர்கள் இணைந்து நடாத்தவிருக்கின்ற பரிசளிப்பும், கலை விழாவும் சிறப்பாக நடைபெறுவதையிட்டு எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையென்பது கற்றல் கற்பித்தலுடன், இணைப்பாடவிதானச் செயற்பாடுகனையும் அதனூடாக ஆளுமைச் சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றமை எதிர்காலச் சந்ததியினர் நவீன உலகில் பல சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சிறந்த பிரஜைகளாக உருவாகுவதற்கு வழிவகுப்பதோடு, நாட்டினது அபிவிருத்திக்கும் பங்களிக்கின்ற சமூகமாக மாறுவர் என்பது உறுதி.

இந்நிகழ்வுகளின் மூலம் மாணவர்களை ஊக்குவிப்பது மாத்திரமல்லாது அவர்களது திறன்களையும், கலையுணர்வுகளையும் வளர்ப்பதாகவும் அமைகின்றது. இந்த வகையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைச் சமூகம் அனைவருக்கும் எனது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. என்.விஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திரு/ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலய மாணவர்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் நோக்கிலும், எதிர்கால மாணவர்களை விழிப்பூட்டும் வகையிலும் பரிசளிப்பு விழாவினை முன்னெடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

அத்துடன் பரிசளிப்பு சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிட முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. பாடசாலையின் தோற்றம், அதன் வளர்ச்சி, எதிர்கால போக்கு என்பவற்றை அறிந்து கொள்ள ஆவணங்கள் அவசியம். அந்த வகையில் இச் சிறப்பு மலர் பல தகவல்களையும், தரவுகளையும் கொண்டமையும், எதிர்கால சந்ததியினருக்கு ஆவணமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

திரு. கே. யோகானந்தன் அவர்கள் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் கல்வி அபிவிருத்தியில் (கற்றல் - கற்பித்தல்) அதிக அக்கறையுடன் செயற்படுவது பாராட்டுக்குரியது. கல்வி வெளியீட்டில் சாதனை படைத்தவர்களை இப் பரிசளிப்பு விழா மூலம் கௌரவிக்க முனைவது சாலச் சிறந்தது.

எனக்கும் வாழ்த்துச் செய்தி அளிக்க சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றி கூறுவதுடன் இம் முயற்சி வருடாந்தம் நடைபெற எனது வாழ்த்துக்கள்.

திரு. க. அரியநாயகம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
வலயக் கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**ஆலோசகர்கள்**

**திரு. க. யோகானந்தன் அதிபர்**

**திருமதி. உ. கனகசிங்கம்**

**இதழ் ஆசிரியர்**

**திரு. சி. ரவீந்திரன்**

**இணையாசிரியர்கள்**

**திருமதி. N. வரதராஜா**

**திருமதி. T. விஸ்ணுகுமார்**

**திருமதி. I. காளிராஜா**

**திரு. R. தர்சநாத்**

**திரு. N. ஜெயசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதழிலிருந்து.....

கோணேஸ்வரர் அருள்புரியும் திருமலையில் நகரின் கண் அருகாய் அமைந்த இலிங்கநகரின் தி/ ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவின் "செந்தூரம்" எனும் பெயர் கொண்ட இதழ் மலர்வது கண்டு இதயம் பூரிக்கின்றது.

படைப்பாளிகளின் எண்ணக் கருக்களையும், பாடசாலை வரலாற்றுச் சம்பவங்களையும் சுமந்து வரும் மலராக "செந்தூரம்" மணம் வீசும் என்பதில் ஐயமில்லை. மங்காத பெருமையுடன் மணம் கமழும் இம்மலர் இப் பாடசாலையின் வளர்ச்சியினை உறுதி செய்யும். அதிபரின் ஆலோசனையுடனும், பெரியோர்களின் ஆசீர்வாதத்துடனும் அமையப் பெற்ற இப்பெரு முயற்சிக்கு அர்ப்பணித்து உழைத்திட்ட அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி கூறுவதில் பெருமையடைகின்றேன்.

இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

இலிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம் திருக்கோணமலை கண்டி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. கோணேசர் கல்வெட்டோடு தொடர்பு கொண்ட மா, பலா, வாழை என்னும் முக்கனிகள் நிறைந்த இலிங்கநகர் கோணலிங்கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் அருகாய் அமைந்துள்ளது. இப்பாடசாலையின் வரலாற்று ஏடுகளிலே இன்றைய நாள் பொன்னாளாகும். 1977இல் திரு. எஸ். இராமசாமி என்பவரின் அரும்பெரும் முயற்சியின் காரணமாக கல்வியிலும், கலைகளிலும், ஒழுக்கத்திலும் குன்றுபோல் கம்பீரமாய் ஒளிர்ந்து நிற்கின்றது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இவ்வித்தியால வரலாற்று ஏடுகளில் பலர் அதிபர்களாகவிருந்து பெரும் பணியாற்றியுள்ளனர். அர்ப்பணிப்பும், தன்னலம் கருதாத சேவைகளையும் வழங்கிய அத்தகைய பெருந்தகைகளை நெஞ்சார நினைத்துக் கொள்கிறேன். அதிபராகவும் பிரதி அதிபராகவும் நீண்டகாலம் அரும்பணியாற்றிய திரு. கதிரவேலுப்பிள்ளை ஜெயநாதன் அவர்களின் காலப்பகுதியில் கல்வி ரீதியாகவும், பௌதீகவள ரீதியாகவும் இப்பாடசாலை பெருவளர்ச்சி கண்டது போற்றுதற்குரியதாகும்.

இப்பாடசாலையில் 2011.05.16 அன்று பல சவால்கள் மத்தியிலே அதிபராக எனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். கற்றுக்கொண்ட பாடத்தின் மூலமும், பெற்றுக் கொண்ட அனுபவத்தின் வாயிலாகவும் பாடசாலையை முன்னேற்றுவதற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், கல்வித்திணைக்களம் சார்ந்த அதிகாரிகளின் வழி காட்டலின் மூலமாக வினைத்திறன் மிக்க பாடசாலையாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

இப்பாடசாலையில் சாதித்தவைகளை விட இன்னும் பல சாதனைகள் மேற்கொள்ள அனைவரும் அர்ப்பண சிந்தையோடு செயற்பட வேண்டுமென இந்த நந்நாளிலே கேட்டுக்கொள்ளுகிறேன். என்னிடமிருப்பவை வேர்களல்ல வெறும் கால்களே என நம்பிக்கை கொண்டு கல்வியில் எங்கு நலிவுகள் உள்ளனவோ, அங்கே எனது கால்களை நிலைபெறச் செய்ய சித்தமாகவே உள்ளேன். மாணவர்களின் சாதனைகளைக் கண்டு இன்பமுறும் தந்தையாக எப்பொழுதும் இருந்து இப்பாடசாலையை சீரிய பாதையில் இட்டுச் செல்வேன்.

## கற்றல் - கற்பித்தல் சூழல்

கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளில் அகச்சூழல், புறச்சூழல் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கண்களைக் கவரும் மரங்களும், பூஞ்சோலைகளும், பாடசாலைக் கட்டடங்களும், வகுப்பறைச் செயற்பாடுகளும், பாடசாலையை கவின் நிலைக்கு இட்டுச் செல்கின்றன. தரம் 1 தொடக்கம் 13 வரையான வகுப்புக்கள் உள்ளன. வசதிபடைத்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரத்தின் மத்தியிலே உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்க, இங்கு ஏழைப் பெற்றோர்களே தமது பிள்ளைகளை அனுப்பி வைக்கிறார்கள். இதில் சாதிக்க கூடிய மாணவர்கள் உள்ளார்கள். இதனால் சாதனைகள் பல நிகழுகின்றன. இப்பாடசாலை 2007 தொடக்கம் இன்றுவரை பிள்ளை நேயம் பாடசாலை செயற்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருப்பது விஷேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலை

2011 இல் க.பொ.த (சா.தர) ப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பலர் உயர்தரப் பிரிவில் கல்விகற்க தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் பாடசாலை வரலாற்றிலே முதல் தடவையாக செல்வன் பிரியதர்ஷன் 6A, 2B, 1C தரம் சித்தியடைந்துள்ளார். 2012 இப் பெறுபேறுகள் உச்சளவில் இல்லாவிட்டாலும் செல்வன் ஜெ. டினோசன் 1A, 5C, 2S சித்திகளையும், செல்வி. பு. வதனி 1A, 5C, 2S சித்திகளைப் பெற்றுத்தந்துள்ளார்கள். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரை 2011 இல் பலர் 100 இற்கு மேல் புள்ளிகளை பெற்றிருந்த போதும் செல்வன் டேமியன் என்ற மாணவன் 159 புள்ளியைப் பெற்று வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளான். 2012 ஐப் பொறுத்தவரை பெறுபேறு அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 11 பேர் பரீட்சைக்குத் தோற்றி 03 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். குறிப்பாக செல்வன். அலெக்ஸ் மதுசங்க என்ற மாணவன் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார். பரீட்சைக்குத் தயார் படுத்திய திருமதி. வசந்தகுமாரி ஸ்ரீகாந்தன் ஆசிரியை பாராட்டுக்கு உரியவராகிறார். க.பொ.த (உயர்தரப்) பரீட்சையைப் பொறுத்தவரை மாணவர்கள்3 பாடங்களிலும் சித்திபெற்ற போதும் 2004 தொடக்கம் இன்றுவரை பல்கலைக்கழக நுழைவாயிலை அடைய முடியாதவர்களாகவே உள்ளனர். இதனை மாற்றியமைக்க பாடசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை துரிதமாக எடுத்துவருகின்றது எனலாம்.

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

இணைப்பாட விதானச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை மாணவர்களின் பங்குபற்றுதல் உயர் நிலையிலுள்ளது. வலய, மாவட்ட, மாகாண நிலைகளில் சாதனை புரிந்து வருகிறார்கள். 2012 இல் இடம் பெற்ற தரம் 07 மாணவர்களுக்கான "ஒலிம்பியாட்" விஞ்ஞான பாடப் போட்டியில் செல்வி தமிழினி நவமேனன் வலயமட்டத்தில் முதலிடம் பெற்று மாகாணப் தேசிய போட்டியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்று இப்பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இது பாடசாலைக்கு கிடைத்த பெரு வெற்றி என கொள்ளலாம். கடந்த வருடம் செல்வன் சோபிநாத் என்ற மாணவனின் புத்தாக்கம் தேர்த்தெடுக்கப்பட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாடு மண்டபத்தில் புத்தாக்கம் காட்சிப்படுத்தப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். 2012 இல் திருக்கோணமலை நகராட்சி மன்றம் பாடசாலைகளுக்கிடையேயான பேச்சுப்போட்டியை நடாத்தியபோது நகரப் பாடசாலைகள் பலவற்றை தோற்கடித்து செல்வி. அஞ்சலினா முதலாமிடத்தைப் பெற்றுத்தந்துள்ளமை இப்பாடசாலை பெற்றுக்கொண்ட பெருவெற்றியாகும். "தரிசனம் கிரியேஷன்" திருக்கோணமலை பாடசாலைகளுக்கிடையே நடாத்திய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான "அறிவுக்களஞ்சியம்" போட்டியிலேயே எமது பாடசாலை அணியினர் முதலாவது இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். விளையாட்டுப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் கணிசமான வெற்றிகளைப் பெற்றுத்தந்துள்ளனர். 2013 இல் வலயமட்டத்தில் நடாத்தப்பட்ட "தமிழ் மொழித்தினப்" போட்டியில் எமது பாடசாலை "நாடகம்" முதலாவது இடத்தை தட்டிக்கொண்டது. அதுபோல மாவட்ட போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை வரலாற்றில் உயர் வெற்றியாகும். வெற்றிகளைப் பெற்றுத்தந்த ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள். செல்வன் பிரதீபன் கணித ஒலிம்பியாட் தேசிய போட்டியில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கற்கை நிலையம்

திருக்கோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்வி பிரிவின் ஏற்பாட்டில் "நெக்கொட்" நிறுவனம் இருமாடிகளைக் கொண்ட சமூகக்கற்கை நிலையத்தை முன்னரே அமைத்திருந்தமையால் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கென மாலை நேரங்களில் தையல் மற்றும் கேக் ஐசிங் வகுப்புக்கள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. மேலதிகமாக 2012 இல் திருக்கோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தால் தையல் பயிற்சி வகுப்புக்கள் கொடுப்பனவுகளோடு நடாத்தப்பட்டு 2013 மே மாதம் பிரமாண்டமான பொருட் கண்காட்சி நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சமூகத்திற்காக பாடசாலை திறந்துவிடப்படல் வேண்டும் என்பதற்கேற்ப செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# புதிய கணினி கற்கை நிலையம்

இப்பாடசாலை மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்தும் முகமாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ. சுசந்த புஞ்சிநிலமே அவர்களின் பேருதவியோடு இருபது இலட்சம் பெறுமதியான கணினி கற்கை நிலையம் அமைக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இந்த வேளையில் பிரதி அமைச்சர் அவர்களுக்கும் எமது பாடசாலையையும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள உதவி புரிந்த பிரதேச செயலாளர் திருமதி. சசிதேவி ஜலதீபன் அவர்களையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். இதற்கான கணினிகள் வந்து சேர்ந்ததும் மாணவர்களின் கற்றல் மேம்பாடடையும் என நம்பலாம்.

# இதுவரை நடைபெற்ற வேலைகள்

- பாடசாலை நுழைவாயில் முதல் அலுவலகம் வரையான பாதை கொங்கிறீற் தளம் இடப்பட்டமை.
- 65வது தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு நீர்க்குழாய் பொருத்துதல், குளியல் வசதிகளை மேம்படுத்தியமை.
- பாடசாலை முகப்பிற்கு அருகாமையில் இருந்த பாவனைக்கு உதவாத கட்டடம் மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதி பெறப்பட்டு அகற்றியமை.
- "வாசிப்பறை" செயற்திட்டத்தின் மூலம் ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் சீர் செய்யப்பட்டமை.
- கமநெகும் வேலைத்திட்டத்தின் மூலம் மலசல கூடங்கள் மாபிள் பதிக்கப்பட்டு செப்பனிடப்பட்டமை.
- ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் மற்றும் தளபாடங்கள் வர்ணம் பூசி செப்பனிடப்பட்டமை.
- பாடசாலை அலுவலகம் கவிநிலைக்குரியதாக மாற்றியமை.
- போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் வலயக்கல்வி அலுவலகத்தின் உதவியோடு சீராக்கப்பட்டமை.
- அலுவலகத்திற்காக "இன்ரநெற்" இணைப்புப் பெற்றுக்கொண்டமை.
- பெற்றோர் - நலன்விரும்பிகளின் உதவியோடு 2012இல் பிரமாண்டமான முறையில் "இல்லமெய்யல்லுனர்" போட்டி நடாத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் செய்து முடிக்க வேண்டியவை

- அமைச்சர்களதும், திணைக்களத்தின் பேருதவியோடும் ஒன்று கூடல் மண்டபம் அமைத்தல்.
- பாடசாலை மதில்கள் செப்பனிடப்பட்டு வர்ணம் பூசுதல்.
- பாடசாலை முகப்பை சீராக்கம் செய்தல்.
- இடைநிலை வகுப்புகளுக்கு வர்ணம் பூசுதலும், செப்பனிடலும்.
- ஆசிரிய விடுதியை புனரமைத்தல்.
- பாடசாலைக் கிணற்றினை ஆழமாக்கி, நீரைப் பெற்றுக்கொள்ளல்.
- நூலகம் செப்பனிடப்படுதலும், வர்ணம் பூசுதலும்.
- மாணவர் தொகையை அதிகரித்தல்

திரு. க. யோகானந்தன்
அதிபர்

வாழும் நாள் சிலவேளையாயினும் அவற்றை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும். மனம், வாக்கு, காயங்களினால் இறைவனைச் சிந்தித்து வணங்கி பலன் பெற வேண்டும் என வேதம் கூறுகின்றது. எல்லா நலனுக்கும் இருப்பிடம் இறைவனே. அவனை நினைத்து வணங்க எல்லா நலனும் வந்தெய்தும். நல்லெண்ணங்களினால் இதயம் நிறைந்தும் இருப்பின் வாக்கில் இருந்து நல்லினிய மொழிகளை விளக்கும். செய்கைகளும் நல்லனவாகவே அமையும். ஆகவே எண்ணங்களை தூய்மைப் பெற செய்தல் வேண்டும்.

- விபுலானந்த அடிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/கோணலிங்க மகா வித்தியாலத்தின் வரலாறு

| | | |
|---|---|---|
| பாடசாலையின் பெயர் | : | தி/இலிங்கநகர் அ.த.க. பாடசாலை |
| பாடசாலையின் ஆரம்பம் | : | 31.10.1977 |
| அன்றைய மாணவர் தொகை | : | 104 |
| வகுப்பு | : | தரம் 5 வரை |
| ஆசிரியர் தொகை | : | 03 (அதிபருடன்) |
| முதல் ஆசிரியர் பெயர் | : | திரு. எஸ். சுப்பிரமணியம் |
| காணியின் விஸ்தீரம் | : | 1/4 ஏக்கர் |
| கட்டடம் | : | 01 (அளவு 60' - 20') |
| பாடசாலையின் தரம் | : | தரம் III |
| பாடசாலை இலக்கம் | : | 29091 |
| I.D இலக்கம் | : | SCH 1701011 |
| தொகை மதிப்பீட்டு இலக்கம் | : | 16061 |
| தொ. பே. இலக்கம் | : | 026-2223086 |

## வளர்ச்சிப்படி

| | |
|---|---|
| 1977.01.31 | : பாடசாலை ஆரம்பம் - தரம் III |
| 1993.11.10 | : தரம் II பாடசாலையாக தரமுயர்வு (தரம் 9 ஆரம்பிக்கப்பட்டது) |
| 1999.08.01 | : தி/கோணலிங்க வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. |
| 2004.07.01 | : 1C பாடசாலையாக தரமுயர்வு. (தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்) |


## கடமையாற்றிய அதிபர்கள்

| | |
|---|---|
| 31.01.1997 - 31.06.1981 வரை | - திரு. எஸ். சுப்பிரமணியம் |
| 01.07.1981 - 15.05.1983 வரை | - திரு. பு. நவரத்தினம் |
| 16.05.1983 - 14.03.1984 வரை | - திரு. கு. பாலச்சந்திரஐயர் |
| 15.03.1984 - 31.12.1990 வரை | - திரு. வீ. அருளம்பலம் |
| 01.01.1991 - 27.10.1997 வரை | - திருமதி. பு. சண்முகசுந்தரம் |
| 28.10.1997 - 10.03.2011 வரை | - திரு. க. ஜெயநாதன் (SLPS-1) |
| 16.05.2011 - இன்றுவரை | - திரு. க. யோகானந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்




## கவிஞர்.க.யோகானந்தன்

SLPS-2, BA, Dip in Edu, PGDEM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...........


| | | |
|---|---|---|
| 01. | ஆசிரியர் விபரம் | 01 |
| 02. | இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் | 02 |
| 03. | ஆசானே | 03 |
| 04. | நல்ல ஆசிரியர் | 03 |
| 05. | பாடசாலைகளில் தரக்கல்வி வட்டம் | 04 |
| 06. | உலகின் அடையாளங்கள் | 07 |
| 07. | நாடுகளின் சிறப்புப் பெயர்கள் | 07 |
| 08. | கிழக்கு மாகாண விவசாய அபிவிருத்தி தந்திரோபாயம் பற்றி பங்காளிகள் அறிந்து கொள்ள வேண்டியவை | 08 |
| 09. | கலைச் சொற்கள் | 09 |
| 10. | நிலையான தோல்வி இல்லை | 10 |
| 11. | நம் வரி நாற்பது | 11 |
| 12. | சர்வதேச தினங்கள் | 12 |
| 13. | What's life | 13 |
| 14. | மனையாளும் மனைப்பொருளியலும் | 14 |
| 15. | பள்ளின் வடிவமும் பொருளும் | 15 |
| 16. | ஆசிரியரின் வகுப்பறை முகாமைத்துவம் | 17 |
| 17. | புவியியல் கலைச் சொற்கள் | 19 |
| 18. | வாய்ப்புண்ணும், வாய்புற்றுநோயும் | 22 |
| 19. | தமிழில் மாற்றொலியன்கள் பயன்படும் விதம் | 24 |
| 20. | திருக்குறல் கூறும் அறக்கருத்துக்கள் | 26 |
| 21. | நாங்கள் என்ன கறிவேப்பில்லையா | 28 |
| 22. | நான் கண்ட உண்மைகள் | 31 |
| 23. | நவீன மருத்துவக் குறிப்புகள் | 32 |
| 24. | வாழ்வில் முன்னேற வைர வரிகள் | 32 |
| 25. | அனுபவங்களே வாழ்க்கை | 33 |
| 26. | தாய்மை | 34 |
| 27. | வெற்றிக்கு வழி | 35 |
| 28. | கல்வி | 35 |
| 29. | எனது பள்ளி | 36 |
| 30. | சேவைத்திறன் உறுதி மொழிகள் | 37 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 31. | தரைக்கீழ் நீர் மாசடைதல் | 38 |
| 32. | ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கற்றலில் இடர்படுவதற்கான காரணங்கள் | 41 |
| 33. | ஆசிரியர் | 44 |
| 34. | சிறப்புப் பெயர்கள் | 45 |
| 35. | பேனாவின் சுயசரிதை | 45 |
| 36. | அறிவுக்கான அறிவுரைகள் | 46 |
| 37. | பகவத்கீதை சொல்லும் வாழ்க்கை | 47 |
| 38. | இலங்கையின் தீவுகளும் நீர்வீழ்ச்சிகளும் | 47 |
| 39. | புவியிட தொழில் நுட்பமும் பூகோள இடைநிலை ஒழுங்கும் | 48 |
| 40. | தமிழர் பண்பாடு | 52 |
| 41. | Important of Tree | 53 |
| 42. | Do you want Joy | 53 |
| 43. | நரத்தனமும் நவரசமும் | 54 |
| 44. | தகவல் தொழில்நுட்பம் | 56 |
| 45. | மாணவர் அடைவுமட்டம் (பரிசு பெறும் மாணவர் விபரம்) | 58 |
| 46. | 2011 அன்பளிப்புக்கள் | 68 |
| 47. | G.C.E (O/L) Results Analysis from 2010 -2011 | 69 |
| 48. | நன்றி நவில்கின்றோம் | 70 |
| 49. | விளம்பரங்கள் | 71 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் விபரம் - 2013

| இல | பெயர் | விபரம் |
|---|---|---|
| 01 | திருமதி. க. யோகானந்தன் | அதிபர், SLPS 2 - II, B.A, PGDEM |
| 02 | திருமதி. உ. கனகசிங்கம் | கலைப்பட்டதாரி, SLTS - I |
| 03 | திருமதி. ந. நவரெட்ணராஜா | பயிற்றப்பட்ட மனையியல், SLTS - I |
| 04 | திருமதி. சு. நவநேசன் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்), SLTS 2 II |
| 05 | திருமதி. அ. ஞானமலர் | பயிற்றப்பட்ட றோ. கத்தோலிக்கம், SLTS 2 II |
| 06 | திருமதி. சி. யுவராஜ் குமார் | பயிற்றப்பட்ட விஞ்ஞானம், SLTS 2 II |
| 07 | திருமதி. த. விஷ்ணுமார் | கலைப்பட்டதாரி, SLTS 1 I |
| 08 | திருமதி. தே. கோகுலசிங்கம் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, SLTS 2 II |
| 09 | திருமதி. வ. ஸ்ரீகாந்தன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, SLTS 2 I |
| 10 | செல்வி. தி. பரமலிங்கம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) SLTS 2 II |
| 11 | திருமதி. நி. வரதராஜா | கலைப்பட்டதாரி, SLTS - I |
| 12 | திருமதி. ம. விக்னஜெயராம் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS - 2 I |
| 13 | திருமதி. கி. காளிராசா | கலைப்பட்டதாரி SLTS - I |
| 14 | திருமதி. வி. சபேசன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS - 2 II |
| 15 | திருமதி. சி. ரவீந்திரன் | கலைப்பட்டதாரி SLTS - I |
| 16 | திருமதி. நு. ஹரிச்சந்திரா | பயிற்றப்பட்ட ஆங்கிலம் SLTS - 3 I |
| 17 | திரு. இ. தர்ஷனாத் | பயிற்றப்பட்ட சமயம் SLTS - 3 I |
| 18 | திரு. இ. லோ. சிறிதரன் | பயிற்றப்பட்ட விஞ்ஞனம் SLPS - 3 |
| 19 | திரு. தி. ஜொன்கெனடி | பயிற்றப்பட்ட வர்த்தகம் SLTS - 2 II |
| 20 | திரு. நா. ஜெயசீலன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS - 2 II |
| 21 | திருமதி. ச. கிருபாகரன் | கலைப்பட்டதாரி SLTS - 2 II |
| 22 | திரு. ஏ. ஜி. சத்தியநாதன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS - 2 II |
| 23 | திரு. இ. மிதுனன் | பயிற்றப்பட்ட உடற்கல்வி SLTS - 2 II |
| 24 | செல்வி. தே. டர்ஜினி | பயிற்றப்பட்ட நடனம் SLTS - 3 I |

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. சு. பிரமேந்திரன் | விஞ்ஞானப்பட்டதாரி SLTS - 2 II |
| 2 | திருமதி. J. ஜோசப் | பயிற்றப்பட்ட ஆங்கிலம் SLTS - 2 I |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011இல் இருந்து இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களின் விபரம்

| | |
|---|---|
| 01. | திருமதி. நமணி தயாபரன் |
| 02. | திருமதி. த. மாணிக்கராசா |
| 03. | திரு. ஈ. சசிதரன் |
| 04. | செல்வி. ர. கதிர்காமத்தம்பி |
| 05. | திருமதி. ச. சிவனேஸ்வரன் |
| 06. | திருமதி. வி. வசீகரன் |
| 07. | திருமதி. இ. மகாலிங்கம் |
| 08. | திரு. தி. சண்முகதாஸ் |
| 09. | திருமதி. வே. செல்வசீபன் |
| 10. | திருமதி. றஜனி தயாபரன் |
| 11. | திரு. கா. அழகேஸ்வரன் |
| 12. | திருமதி. பா. கண்ணதாஷன் |

# பாடசாலை முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 01. | திரு. க. யோகானந்தன் | (அதிபர்) |
| 02. | திருமதி. உ. கனகசிங்கம் | (பிரதி அதிபர்) |
| 03. | திருமதி. நி. வரதராஜா | (A/L பகுதித்தலைவர்) |
| 04. | திருமதி. அ. ஞானமலர் | (6-11 பகுதித்தலைவர்) |
| 05. | திருமதி. தே. கோகுலசிங்கம் | (1-5 பகுதித்தலைவர்) |
| 06. | திருமதி. ச. கிருபாகரன் | (ஆலோசனையும் வழிகாட்டலும்) |
| 07. | திரு. சி. ரவீந்திரன் | (சிரேஷ்ட ஆசிரியர்) |
| 08. | திரு. இ. லோ. ஸ்ரீதரன் | (அதிபர் தரம் 3) |
| 09. | திரு. A. G. சத்தியநாதன் | (சிரேஷ்ட ஆசிரியர்) |


எவனுடைய அறிவு நியாயமாக இல்லையோ அவன் எளிதில் கோபத்துக்கும் தீய எண்ணங்களுக்கும் இன்னாச் சொற்களுக்கும் இடம் கொடுத்துவிடுகிறான்

காந்தியடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உதவி அதிபர்




திருமதி.உ.கனகசிங்கம் BA, Dip in Edu, SLTS-1

# வித்தியாலய ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசானே....

வெண்கட்டி கொண்டு
எம் உள்ளத்தை
வெண்மைப் படுத்த
நித்தம் நீர் கூறிய
அறிவுரைகளை
மறவேனோ ஆசானே?

நீர்படிப்பித்த
எழுத்தைக் கொண்டு
உம்மை வாழ்த்தி
கவி வடிப்பதில் பரவசம் எனக்கு

வானின்றி வான்மழையா?
வேரின்றி மரக்கனியா?
ஆசானின்றி கல்லூரி மாணவரா?
இல்லை தானே!
நம் பந்தம் பிரியா
சம்பந்தம் தானே!

எம் கருவறை வாழ்வு
இன்றும் அறியாதது.
எம் பள்ளி வாழ்வு
என்றும் அழியாதது.
நீர் தந்த அனுபவங்களின்
சாயல்களால்...!

ஆசையாய் ஓடி ஓடி
ஆசான் உம்மை
அழைக்கும் போதெல்லாம்
அரவணைக்கும் தாயாக
தைரியமூட்டும் தந்தையாக
செவி சாய்த்திட்டீரே
ஊக்கமளித்திட்டீரே!

எங்கள் பிஞ்சுக் கைவண்ணங்கள்
உங்கள் நெஞ்சுக்கு
உவகையளித்த
நினைவுச் சின்னங்கள்
என்பதை நாமறிவோம்.

என்றும் ஆசிரியப்பணி
ஓங்குக!
என்றும் ஆசிரியர்கள்
வாழ்க!

செல்வி. A. கீர்த்தனா
13 கலைப்பிரிவு

## நல் ஆசிரியர்

தொழில்பற்று
முகமலர்ச்சி
நேர்த்தியான ஆடை
நேரிய பாதை
ஆனந்த பேச்சு
வளமான குரல்

சொல்வளம்
தொடர்ந்து கற்றல்
சிந்தனைத் தெளிவு
தேவைக்கு லீவு
நிறை காணல்
முந்தி வந்து பிந்தி செல்லல்
கருப்பொருள் அறிந்து கற்பித்தல்
பாடவேளைக்கு உரிய நேரத்திற்கு வரல்
அறியாதது அதிகம் என நினைத்தல்
பிழையை ஏற்றல்
உலாவிக் கற்பித்தல்
மாணவரை மதித்தல்
வகுப்பு ஆளுமை
பணிப்புரை ஏற்றல்
நடுநிலைச் சார்பு
சுயமான இயக்கம்
சேவை நோக்கம்
மாணவரின் சம கவனிப்பு
உரையாடித் தீர்த்தல்
நிர்வாகத்திற்கு உதவுதல்.

"பேசுமுன் ஒருமுறை யோசி
எழுதிய பின் இருமுறை வாசி"
வீழ்ச்சியில் கலக்கமோ, மகிழ்ச்சியில்
மயக்கமோ கொள்ளாதே.

செல்வி. யு. தியானா
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் தரக்கல்வி வட்டம் (Quality Education Circle)

இலங்கையிலுள்ள பாடசாலை அமைப்பில் தற்போது நடைமுறையிருக்கும் "யாவருக்கும் கல்வி" என்ற எண்ணங்களிலிருந்து 2012 முதல் " சகலருக்குமான கல்வி" எனும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கட்டமைப்புக்களை கல்வியமைச்சு மேற்கொண்டு வருகின்றது. அவற்றில் "கல்வித்தரவட்டம்" என்பது மிகவும் காத்திரமானதாகக் காணப்படுகிறது. எனவேதான் இதனை Bottom up approach, Participating approach and step by sated approach எனப் பலவாறு குறிக்கிடுகின்றனர். காரணம் இங்கு யாவரும் குறித்த இலக்கினை அடைவதற்குத் தமது முழுமையான பங்களிப்பை உணர்வு பூர்வமாக தம்மிடையே உள்ள பிரச்சினைகள், சவால்கள் குறித்த பாடப்பரப்பு தொடர்பான சிக்கல்கள் என்பனவற்றை ஒன்றாகக் கூடி ஆராய்ந்து கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்வதேயாகும்.

**ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்த வேண்டும். இங்கு இற்கைப்படுத்தல் என்பது சமகால நிலைமைகள் தேவைகளுக்காக ஏற்ப கல்வியை உச்ச அளவில் பயன்படுத்துதல் என்பதாகும். மேலும் இயற்கைப்படுத்தலைக் கொண்ட ஆசிரியரே உயிர்த்துடிப்புள்ள ஆரோக்கியமான பண்புசார் விருத்தியை ஏற்படுத்தவல்ல கல்வியினை வழங்க முடியும்.**

சர்வதேச கல்வி நிறுவகம் கல்வியை இற்றைப்படுத்தலினூடாக பின்வரும் பிரவேசங்களை எடுத்தியம்பியுள்ளது.

- கல்வி கிடைக்கக்கூடிய வளங்களையும் அமைப்புக்களையும் விரிவாக்க கலைத்திட்டங்களை இற்றைப்படுத்தல்.
- கல்வியில் சமவாய்ப்பு, சமகணிப்பின் ஊடாக சர்வதேச நிலைகளுடன் பொருந்துதல்
- அறிவின் உன்னதங்களை நோக்கி ஒவ்வொருவரையும் திசைமுகப்படுத்தலும் தொழிற்கல்விக்கான வழிகாட்டுதல்களும்.
- பாடசாலை ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்தி முகாமைத்துவ ஆற்றலை பெருக்குதல். கல்வித்தொழில்நுட்ப ஆற்றலை விருத்தியாக்கல்.
- மாணவர் கற்றலுக்கான தர உள்ளீடுகளுக்கான வளங்களைப் பெருக்குதல்.
- வகுப்பறைக்கு வெளியேயான களவேலைகள், கல்விச்சுற்றுலாக்கள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள், பாடசாலை தோட்டம் என்பவற்றில் எல்லாமாணவர்களையும் ஈடுபடுத்துதல்.
- கல்வி முகாமைத்துவ அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை அறிமுகம் செய்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வூட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் மாணவர்களுடைய கல்வியை இற்றைப்படுத்தலும் புதிய போக்குகளுக்கு அவர்களைத் திசைமுகப்படுத்தலும் ஆசிரியரே முதன்மை பெறுகிறார். எனவே தான் சமூகம் பலவற்றை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. உதாரணமாக சமகாலப்பிரச்சனைகள், இயைபாக்கமின்மைகள், அரசியல் தலையீடுகள் பரீட்சைகளின் ஆதிக்கம் பொருத்தமற்ற பழமை பேணல் சமூக இன பண்பாடு முரண்பாடுகள், சம்பளப்பிரச்சனைகள், உயர்க்ல்வி, தொழிற்கல்வி பெறமுடியாத நிலை என ஆசிரியர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இச்சூழ்நிலையில் ஆசிரியர்களின் பலங்களை வளமாக்கி பலவீனங்களைப் போக்க பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்க வேண்டியுள்ளது. இந்நிலையில் கல்வித் தரவட்டத்தினை விளைத்திறனாக்குவதற்கு "SOWT" பகுப்பாய்வை மேற்கொண்டு சுயமதிப்பீட்டை விருத்தியாக்க வேண்டும்.

| | |
|---|---|
| * பலம் | Strength |
| * சந்தர்ப்பம் | Opportunity |
| * பலவீனம் | Weakness |
| * சவால்கள் | Threats. |

ஆசிரியர்கள் பாடங்களை மாணவர்களுக்குத் கற்பிக்க வழிகாட்டுகின்ற போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தாமே ஒன்றிணைந்து வாரத்தில் அல்லது இரண்டு வாரத்தில் ஒரு தடவை சிந்தித்து அவை தொடர்பாக ஆராய்ந்து எடுக்க வேண்டிய தீர்மானங்களைக் கலந்துரையாடி தேடி அறிந்து தமது பாடசாலைச் செயற்பாடுகளைத் தரமாக்கும் அதே வேளை தமது தொழில்வாய்ப்புக்களையும் திருப்தியார்க்கும் உத்தியாகத் தரவட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தரவட்ட கலந்துயைாடலில் SOWT பகுப்பாய்வு சரியீட்டுப்பட்டியல்கள், சிதறல் வரைபட ஆய்வு கண்காணிப்பு வரைபடம், காரண விளைவு வரைபடம் Brain Storming எனப் பலவகைப் பகுப்பாய்வுகள் மூலம் ஆசிரியர்கள் தங்களிடமுள்ள சிக்கல்களை தரக்கல்வி வட்டம் மூலம் கண்டறிந்து தீர்த்து, செயற்படுத்திய பயன்கண்டு அதை அதிபர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் மற்றும் கல்விப்பணிப்பாளர்களுக்கு எடுத்துரைப்பர். நவீன மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவத்தில் இத்தரவட்ட செயலாற்றுகை முதன்மை பெறுகின்றது.




* மனிதவள இடைவினை மூலம் நேர் மனப்பாண்மையை ஏற்படுத்துதல்.

* குறைகூறாத பண்பு பிரச்சினைகள் ஏற்படும் போது அது தொடர்பாக ஆசிரியர்கள் ஒன்றுகூடி மனந்திறந்து தீர்மானம் எடுத்தலின் ஊடாக பொருத்தமான வாண்மைத்துவ வாய்ப்பைப் பெறல்.


* குழு ரீதியான மனநிலை குறித்த எல்லோருமே பங்குபற்றுவதற்கும் தமது கருத்தை எடுத்துரைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கல் மூலம் பாடசாலை வெற்றிக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய குழுரீதியான மனநிலையுடன் தீர்மானங்களை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புத்துணர்வு - இந்தப் பாடசாலை, இந்த வகுப்பு என்னுடையது இதன் முன்னேற்றம் என் முன்னேற்றம் என்ற உணர்வை வளர்ப்பதால் தரவட்டம் சுயநலத்தை நீக்கி எனது உழைப்பை பாடசாலைக்கு வழங்குதல் தொடர்பான பங்கேற்றல் அதிகரிக்கும்.

இக் கல்வித் தரவட்டத்தில் பங்குபற்ற யாவரும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. எனினும் ஒவ்வொரு ஆசிரியரும் தங்களை ஒத்த ஆசிரியர்களுடன் இணைந்து கலந்துரையாடி கற்பித்தலில் ஈடுபடும் போது அது முழுமையானதாகக் கருதப்படும். இங்கு ஆசிரியர்கள் தாமாகவே முன்வருவர். கட்டுப்படல், கட்டாயப்படல் என்பது இங்கு இல்லை. இது உயர் வாண்மைத்துவ பண்பாக உள்ளது. இதனை எமது ஆசிரியர்களிடையே ஏற்படுத்தப் படிப்படியான ஆற்றுகைச் செயலாற்றுகை இன்று தேவையான ஒன்றாக உள்ளது.




R. தர்ஸனாத்
Dip. in Teacheing
ஆசிரியர்
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்

◈ நம்பிக்கையும் தைரியமும் வெற்றிக்கிரீடத்தின் ஒளிமிகு இரு வைரங்கள்.

◈ கோபத்தால் சாதிப்பதை விட பொறுமையால் எவ்வளவோ சாதிக்கலாம்.

◈ சென்ற காலத்தை நீ தெரிந்து கொள் வருங்காலத்தை நீ தெரிந்து கொள்வாய்.

◈ தவறான பாதையில் நீ எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் சரி திரும்பி வா.

◈ பயிர்களுக்கு கேடு களைகள், மனிதனுக்கு கேடு ஆசைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அடையாளங்கள்

சர்வதேச குறியீடுகள் அடையாளம் மூலம் மொழியின்றி யாவராலும் புரிந்து கொள்ள முடியும்.

| சர்வதேச அடையாளம் | அர்த்தம் |
|---|---|
| ஒலிவ் மரத்தின் இலை | சமாதானம் |
| வெள்ளைப்புறா | சமாதானம் |
| தாமரை | பண்பாடு/ நாகரீகம் |
| தீப்பந்தம் | ஒலிப்பிக் |
| எலும்பின் நடுவில் மண்டையோடு | அபாயம் |
| வெள்ளைக் கொடி | சோகம்/துக்கம் |
| சிவப்புக்கொடி | அபாயம்/புரட்சி |
| கறுப்புக்கொடி | எதிர்ப்பு |
| மஞ்சள் கொடி (கப்பலில்) | தொற்றுநோய் அபாயம் |
| தர்மச்சக்கரம் | தர்மம் |

செல்வன். ர. ஜனக்சன்
தரம் – 9
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



## நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

- சூரியன் மறையும் நாடு ➡ இங்கிலாந்து
- காகித வீடு, சூரியன் உதிக்கும் நாடு ➡ ஜப்பான்
- நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு ➡ நோர்வே
- தெற்கேயுள்ள பிரித்தானியா ➡ நியூசிலாந்து
- அதிகாலை அமைதி நாடு ➡ கொரியா
- கண்ணீர் வாசல் ➡ மாவெல் மண்டெல்
- இந்தியாவின் வாசல் ➡ மும்பாய் துறைமுகம்
- சீனாவின் வாசல் ➡ கொயங்கோ நதி
- நைல் நதியின் கொடை ➡ எகிப்து
- ஆயிரம் வாவிகள் நாடு ➡ பின்லாந்து
- உலகின் கூரை ➡ பமீர், திபெத்
- உலகின் சக்கரை கிண்ணம் ➡ கியூபா
- ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் ➡ சுவிஸ்லாந்து
- ஐரோப்பாவின் காப்பகம் ➡ பெல்ஜியம்
- ஐரோப்பாவின் நோயாளி ➡ துருக்கி
- ஐரோப்பாவின் கோழிக்கூடு ➡ நெதர்லாந்து
- புனித நாடு ➡ பலஸ்தீனம்
- ஆசிய நோயாளி ➡ மியன்மார்
- குகைவீடு, இருண்ட கண்டம் ➡ ஆபிரிக்கா

செல்வி. 1. பியூனா
தரம் – 9
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண விவசாய அபிவிருத்தி தந்திரோபாயம் பற்றி பங்காளிகள் அறிந்து கொள்ள வேண்டியவை

கிழக்கு மாகாணத்தின் இயற்கை நன்கொடைகளை நிலைத்து நிற்கக் கூடியவாறு பேணி, அவற்றிலிருந்து உச்சபயன் அடைவதும், சுயதேவைக்கான விவசாயச் செய்கையிலிருந்து வர்த்தக மயமாக்கல் செயல் திட்டங்களை மேற்கொள்வதும் விவசாயத்துடன் தொடர்புடைய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான தளத்தை அமைத்துக் கொடுப்பதும் விவசாயத் துறையில் மனித வளத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதை இது வலியுறுத்துகிறது. இதனூடாக விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் போதுமான தொழில் வருமான வாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு மண், நீர், நிலம், சக்தி போன்ற வளங்களை பாதுகாப்பான முறையில் கையாளப்படுவது முக்கியமாகும். இங்கே நிறுவன ரீதியான அபிவிருத்தியையும், சிறிய விவசாயிகளுக்கும், பெரிய முதலீட்டாளர்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவது ஒரு பிரதான அம்சமாகும்.

பொருத்தமான தொழில் நுட்பங்களைப் பின்பற்றல், மக்களை மையமாகக் கொண்ட சங்கங்களை வர்த்தக நிறுவனங்களாக மாற்றுதல், விவசாய அபிவிருத்தி தந்திரோபாயத்தின் ஒரு அம்சமாகும். மேலும் குடும்பவருமானத்தை அதிகரிப்பதற்கு பெண்களுக்கான சிறுகடன் மற்றும் குடிசைக் கைத்தொழில் வசதிகள் போன்றவற்றை வழங்கி அதற்குத் தேவையான பயிற்சி நெறிகளையும், சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுப்பது குறிக்கோளாகும்.

இத் தந்திரோபாயத்தினூடாக ஏனைய மாகாணங்களிலும் பார்க்க கிழக்கு மாகாணம் துரித பொருளாதார வளர்ச்சியை நோக்கி உச்ச பயனடைவதில் விவசாய அபிவிருத்தி அமுலாக்களில் பங்கு கொள்ளும் பல்வேறுபட்ட பிரதிநிதிகளாகிய மாகாணமட்ட, மாவட்ட மட்ட, விவசாயத்திணைக்கள அதிகாரிகள், உதவிக் கமநல ஆணையாளர்கள், உதவிக் கூட்டுறவு ஆணையாளர்கள், கால்நடை வைத்தியர்கள், நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள், காப்புறுதி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பையும் விவசாய அபிவிருத்தியில் தனியார் துறையாளரின் வாய்ப்பையும் தெளிவாக விளக்கிக் கொள்ளல் அவசியமாகிறது.

பூ. உகநாதன்
விவசாயப் பணிப்பாளர்
மாவட்ட விவசாயத் திணைக்களம்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு.

இறையருளைப் பெறு, நீ எல்லாவற்றையும் பெற்றவனாகி விடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச் சொற்கள்

தொடர்பாடல் வளர்ச்சி, விஞ்ஞானத்தின் விந்தை, புதிய கண்டுபிடிப்புக்கள் காரணமாக புதிய ஆங்கில சொற்கள் உருவாகுவதற்கு ஏற்ப அச்சொற்களுக்கு உரிய புதிய தமிழ்ச் சொற்களும் உருவாதலால் தமிழ் மொழியை வளர்மொழி என்பர் அறிஞர். உதாரணத்துக்கு சில கலைச்சொற்கள்

1. Battery - மின்கலம்
2. Type - தட்டெழுத்து
3. Shorthand - சுருக்கெழுத்து
4. Office - பணியகம்
5. Secretary - செயலாளர்
6. Enlarger - உருப்பெருக்கி
7. Secretarial - செயலகம்
8. Copies - படியெடுக்கும் கருவி
9. Regicform - வன்நுரை
10. Vibration - அதிர்வு
11. Car - மகிழ்வூர்தி
12. Train - தொடருந்து
13. Cycle - ஈருருளி
14. Calculator - கணிப்பொறி
15. Computer - கணினி
16. Fax - தொலைநகல்
17. Telegram - தந்தி
18. Telephone - தொலைபேசி / தெலைபன்னி
19. Internet - இணையம்
20. SMS (Short Massage Service) - சுருக்கத் தகவல் சேவை
21. Network - வலைப்பின்னல்
22. Media - ஊடகம்
23. Multimedia - பல்லூடகம்
24. Ice cream - குளிர்களி
25. CD/ Disk (Compact disk) - இறுவட்டு
26. Helicopter - உலங்கு வானூர்தி
27. Software - மென்பொருள்
28. Hardware - வன்பொருள்
29. Memory - நினைவகம்
30. OHP (Over Head Projector) - மேன்தலை எறியீ
31. Telescope - தொலைநோக்கி
32. Microphone - ஒலிவாங்கி
33. Oxygen - உயிழுரியம்
34. Document - ஆவணம்
35. Budget - பாதீடு
36. Motor bike - உந்துருளி
37. Phonology - ஒலியமைப்பு
38. Photostat copy - ஒளிப்படப்பிரதி
39. Hard disk - வன் வட்டு
40. Date base - தரவுத்தளம்
41. Visual Base - காட்சித்தளம்
42. Down load - பதிவிறக்கம்
43. Save - பதிதல்
44. Para Shoot - வீழ்காவலி
45. Parachute - பறக்கும் குடை
46. Cascade System - நீர்வீழ்ச்சி முறை
47. File chart - பக்கப்புரட்டி
48. Zopp card - "சொப்" அட்டைகள்
49. Soft board - மென்பலகை
50. Soft pins - குத்தூசி

செல்வி. Y. விஜயா
தரம் – 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான தேல்வி இல்லை

செல்வனே!
ஏழைகள் ஆயிரம் பேருக்கு - நீ
எஜமானாயிருக்கலாம்
ஈ. எறும்பு ஒன்றுக்காவது எஜமானாக
முடியுமா?
உன் பத்து ரூபாய் நோட்டுக்குப் பத்து பேர்
வரலாம்
பத்தாயிரம் நீட்டு. பட்டாம் பூச்சி - உன்னிடம்
வருமா?
வண்டு உட்கார்ந்து இருப்பது உன் தோட்டத்துப்
பூவில் என்றாலும்
உன் வருகை கண்டு எழுந்திருக்குமா?
நீ ஒரு
தேன் கூட்டைத் தொடு செல்வனாயிற்றே
என்று
தேனியாவது உன்னை முத்தமிட்டுப் பறக்குமா?
நீயும்
உன் பணமும் பெறுவது நிலையான
வெற்றியுமல்ல
நாங்களும் எங்கள் ஏழ்மையும்
நிலையான தோல்வியுமல்ல.

செல்வி. ஜெ. ஜெயசுபாங்கினி
தரம் - 3



மௌனம் ஒரு இனிய மொழி.
அது ஒன்று தான் பூமியின் பொது மொழி.
நாம் இந்த சமூதாயத்தில் ஓர் அங்கம்
நம்மில் ஒரு மாற்றம் நிகழாமல் - அது இந்தச்
சமூதாயத்தில் நிகழப் போவதில்லை.
நம் பலவீனங்களோ குறைபாடுகளோ
இலட்சியத்தைக் குறைத்து
கீழ் இறங்கி விடக் கூடாது.

- மகாத்மா காந்தி -

புத்தகம் என்பது எத்தனை வித்தகம் - நீ
பயனுற மற்றோர் செய்த தவமல்லவா -
புத்தகம்
அட்டையிட்ட அமுதமலரல்ல - புத்தகம்
உனக்குள் ஒரு சூரியனல்லவா - புத்தகம்
கலங்கரை விளக்கமல்லவா - புத்தகம்
காலத்தின் விளைந்த கருத்தல்லவா -
புத்தகம்

◊ பிறருக்குத் துன்பம் விளைவிப்பவன் தனக்கே துன்பம் விளைவித்துக் கொள்கிறான்.

◊ கோபம் கொடிய சத்துரு. கோபம் கொண்டால் அது அழிவையே தரும்.

◊ அறிவால் ஆகாதது ஏதுமில்லை, அறிவோடு முயற்சி செய்தால் எளிதில் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் வரி நாற்பது!

எங்கிருந்து வந்தேனோ? எனக்கே தெரியாது!
எங்கு செல்வப் போகின்றேன்? எதுவும் தெரியாது!
வந்தயான் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தேனா?
இந்தப் பிறவியினால் ஏற்ற பயன் கண்டேனோ?
உண்டேன் - உறங்கினேன் - உலகத்தின் கையளவைக்
கண்டேன் - தமிழினையும் கற்றேன் - களிகொண்டேன்!
இன்னும் தான் கற்கின்றேன் - எழுதிடவும் செய்கின்றேன்!
சொன்னேன் சிலவற்றைச் சுவைத்தாரோ யானறியேன்!
மனைகண்டேன் - ஓரைந்து மக்களையும் யான் கண்டேன்!
தனிமைப் பெயரிட்டேன் - தமிழும் கசப்பதுவோ?

இறைவனார் உள்ளத்தில் இல்லாது உதட்டினிலேன்
உறைகின்றார் என்பதுவும் ஒரு கேள்வியாயுளது!
சமைத்தால் "மாந்தனெறி" தழைக்குமேல் மிக்கநலம்
அமையும்! அது போர்வை ஆகாவிடில் நன்றே!
வாயிலிட்டுத தொப்பை வளர்க்காது அரியகலைக்
கோயில் பணங்காசைக் குடிக்காவிடில் நலமே!
மந்திரங்கள் எங்கேனும் மாங்காய் விழுந்துமெனில்
எந்தவித காய்கனிக்கும் ஏறவே தேவையில்லை!
வெறுமையாம் சூனியத்தின் விளைவான பேரச்சம்
பெறுவோர் இதயத்தில் போதிர்வே கண்டபயன்!
மூட நம்பிக்கைகளால் மோசம் யான் போனதிலை!
ஆடும் பேய்க் கூட்டத்தின் அண்மையிலும் நின்றதில்லை!

மண்ணிதிலே பற்றுண்டு மறந்தறியேன் தாமரை வில்!
வாண்மொழியில் புற்றுண்டு வரைதல் தமிழேதான்!
கற்றபல நூல்களிலும் கழிவுகள் கூடுதலே!
உற்ற பயன் நூலில் ஓர்சிலவால் வாழ்த்துகிறேன்!
ஒன்றைப் பலதடவை ஓதியுளேன் - தீட்டியுளேன்!
நன்றுரைத்த வள்ளுவரின் நற்குறளைப் போற்றுகின்றேன்!
தீவானுக்கினி வேண்டும் செந்தமிழே! செம்பரிதிப்
பாவாணர் தம்நூலில் படித்தற்கினி வேண்டும்!
என்ன படித்தாலும் எங்கெதனைக் கேட்டாலும்
என்னை மடக்கிடவும் இல்லைத்தில் ஆட்கள் உளர்!

கீரைக்கடைக் கென்றும் கிடக்கத்தான் வேண்டும் எதிர்!
ஆரைப்பிழை சொல்லொம்? அத்தனைக்கும் நாம் பொறுப்பாம்!
சின்னப்பருவத்தும் தெரிகின்ற காலத்தும்
என்னென்ன செய்தோமோ? எல்லாம் திரும்பவரும்!
எப்படியோ யாவினையும் எவ்வாறோ தாண்டியதால்
இப்படியாம் இங்குள்ளோம்! இனிப்போகும் நாள் வரலாம்!
ஆதலினால் கோல் - தாளை அப்படியே வைத்திடுவம்!
காதடைப்பு - கண்மங்கல் கைவிறைப்பு - தலைச்சுற்றாம்.

"தாமரைத்தீவான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 10 | - | சர்வதேச சிரிப்பு தினம் |
| ஜனவரி 26 | - | சர்வதேச சுங்கத்துறை தினம் |
| ஜனவரி 31 | - | சர்வதேச தொழுநோயாளர் தினம் |
| பெப்ரவரி 14 | - | சர்வதேச காதலர் தினம் |
| மார்ச் 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் 13 | - | சர்வதேச ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் 15 | - | சர்வதேச இனபேத ஒழிப்பு தினம் |
| மார்ச் 22 | - | சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் 23 | - | சர்வதேச வளிமண்டலவியல் தினம் |
| மார்ச் 27 | - | சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் 07 | - | சர்வதேச ஆரோக்கிய தினம் |
| ஏப்ரல் 10 | - | சர்வதேச அன்னையர் தினம் |
| ஏப்ரல் 12 | - | சர்வதேச தாதிகள் தினம் |
| ஏப்ரல் 15 | - | சர்வதேச நூலக தினம் |
| ஏப்ரல் 18 | - | சர்வதேச மரபுரிமை தினம் |
| ஏப்ரல் 22 | - | சர்வதேச பூமி பாதுகாப்பு தினம் |
| ஏப்ரல் 23 | - | சர்வதேச புத்தக தினம் |
| ஏப்ரல் 26 | - | சர்வதேச பாதிக்கப்பட்ட சிறுவர் தினம் |
| மே 01 | - | சர்வதேச தொழிலாளர்கள் தினம் |
| மே 03 | - | சர்வதேச பத்திரிக்கைச் சுதந்திர தினம் |
| மே 08 | - | சர்வதேச செஞ்சிலுவைத் தினம் |
| மே 13 | - | சர்வதேச அந்நியர் தினம் |
| மே 15 | - | சர்வதேச குடும்பநல தினம் |
| மே 17 | - | சர்வதேச தொலைத்தொடர்பு தினம் |
| மே 24 | - | சர்வதேச பொதுநலவாய தினம் |
| மே 31 | - | சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் |
| யூன் 01 | - | சர்வதேச குழந்தைகள் தினம் |
| யூன் 04 | - | சர்வதேச அடக்கு முறைக்கெதிரான தினம் |
| யூன் 05 | - | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூன் 10 | - | சர்வதேச தந்தையர் தினம் |
| யூன் 26 | - | சர்வதேச போதைப்பொருள் தடுப்புத் தினம் |
| யூன் 27 | - | சர்வதேச சயரோக தினம் |
| யூலை 11 | - | சர்வதேச சனத்தொகை தினம் |
| செப்டெம்பர் 02 | - | சர்வதேச தெங்கு தினம் |
| செப்டெம்பர் 03 | - | சர்வதேச சமாதான தினம் |
| செப்டெம்பர் 08 | - | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| செம்டெம்பர் 16 | - | சர்வதேச ஓசோன் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செப்டெம்பர் 27 | - | சர்வதேச சுற்றுலா தினம் |
| ஒக்டோபர் 01 | - | சர்வதேச முதியோர் தினம் |
| ஒக்டோபர் 03 | - | சர்வதேச மது ஒழிப்புத் தினம் |
| ஒக்டோபர் 05 | - | சர்வதேச உறைவிடத் தினம் |
| ஒக்டோபர் 06 | - | சர்வதேச ஆசிரியர் தினம் |
| நவம்பர் 16 | - | சர்வதேச பொறுமை தினம் |
| நவம்பர் 21 | - | சர்வதேச கடல் தொழிலாளர் தினம் |
| நவம்பர் 26 | - | சர்வதேச சட்ட தினம் |
| டிசம்பர் 01 | - | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் 10 | - | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசம்பர் 13 | - | சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம் |
| டிசம்பர் 23 | - | சர்வதேச விவசாய தினம் |

செல்வி. ர. பிரிஜ்ஜா

# What's Life?

| | |
|---|---|
| 1. Life is a Kingdom of God | Understand it |
| 2. Life is a Challenge | face it |
| 3. Life is a gift | receive it |
| 4. Life is a circus | play bravely |
| 5. Life is a sorrow | practice it |
| 6. Life is a duty | finish it |
| 7. Life is a game | participate it |
| 8. Life is a confusion | solve it |
| 9. Life is a problem | find the answer |
| 10. Life is a target (aim) | continue it |
| 11. Life is a plight | find the solutions |
| 12. Life is a puzzle | find it |
| 13. Life is a song | taste it |
| 14. Life is a chance | use it |
| 15. Life is a journey | travel it |
| 16. Life is a promise | save it |
| 17. Life is a love | enjoy it |
| 18. Life is a flower | smell it |
| 19. Life is a struggle | win it |
| 20. Life is a wonderful thing | search it |

By. Lorence
A.G.S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாளும், மனைப்பொருளியலும்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தன்கொண்டாள்
வளத்தக்க வாழ்க்கைத் துணை"

பெற்றோர் பொறுப்பு மகத்தானது. அவர்கள் தம் இளம் சிறார்களுக்கு எத்தகைய பயிற்சி அளிக்கிறார்களோ. அதனைப் பொறுத்துத்தான் அவர்களின் எதிர்காலம் அமையும். அதிலும் சுத்தமான, சுகாதாரமான வீட்டையும், போஷாக்குள்ள பிள்ளைகளையும் அவர்கள் நற்பண்புகளையும் வளர்க்கக் கூடியவள் அவ்வீட்டின் தலைவியே.

சந்தோஷத்தோடு, அமைதியோடு பிரகாசிக்கும் முழுமை நிறைந்த குடும்பத்தை உருவாக்க ஒரு வீட்டில் மனச்சமாதானமும், புரிந்துணர்வும், பண்பும், அன்பும், அறிவும் மிக முக்கியமானதொன்றாகும். இதனை கட்டியெழுப்பக் கூடியவள் மனைவி. அன்னை ஸ்தானத்திலுள்ள ஒரு பெண்ணால் தான் இது முடியும். இத்தகைய ஒரு பெண் தான் வீட்டில் நடமாடும் பெண் தெய்வமாகிறாள்.

இன்றைய நாகரிகத்தில் நாம் பல அழகிய கட்டிடங்களைக் காண்கின்றோம். கட்டிடங்களையும், வீடுகளையும் எவ்வாறு அழகுறச் செய்வதென்று பல அறிவுகளையும் குறிப்புகளையும் பெறுகிறோம். அதற்கேற்றவாறு அழகு சாதனங்கள் வீட்டில் அடுக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வீட்டின் வாழ்க்கை எனும் வட்டத்தினுள் நுழைந்து பார்த்தால் வாழ்க்கையின் அழகினையோ, ஒழுங்கினையோ சிறிதளவும் இரசித்து வாழ்பவர்களாகக் காணப்படமாட்டார்கள். அன்பற்றவர்களாக, தனித்துவம் நிறைந்த வாழ்க்கையை வாழ்பவர்களாகக் காணப்படுவார்கள். நகரப்புறங்களில் மட்டுமல்லாது கிராமிய வீடுகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. இதை ஒழித்து ரம்மியமான வாழ்க்கையை மேலும் விருத்தி செய்வதற்கு அன்பும், அமைதியும், தாயினூடாக, மனைவியினூடாக கொண்டு வரலாம் என்றால் அதை மறுக்க முடியாது.

இரக்க குணம் பொருந்தி, கணவனின் வருவாய்க்கு எற்றவாறு செலவு செய்து இல்லற வாழ்க்கையை வாழ்பவளே உண்மையான மனைவி ஆவாள். அத்தோடு தன்னுடைய குடும்பத்திற்கு தேவையான போஷணையான உணவுப் பதார்த்தங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சத்துக் கெடாது ஆறு சுவையுடன் சமைத்து அன்போடு ஊட்டுவதும், முழுந்தளவு கீரை, மரக்கறி வகைகளை வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கவும், பசு ஒன்றையோ, பாலாடு ஒன்றையோ வளர்த்து பாலையும், கோழியை வளர்த்து முட்டை, இறைச்சி என்பவற்றையும் பெறமுடியும். இதன் மூலம் பிள்ளைகள் போஷாக்குணவை குறைந்த செலவில் சமமான முறையில் பெறக்கூடியதாக இருக்கிறது. போஷாக்குணவும், பிள்ளையின் ஆரோக்கியத்தைச் சிறந்ததாக்குகிறது. இதனால் சிந்திக்கும் திறன், கிரகித்தல் திறன், ஆக்கத்திறன் விருத்தியடைகிறது.

மேலும் இத்தகைய வீட்டுத் தோட்ட செயற்பாடுகள் அவளது ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்குகிறது. மனநிறைவையும், சந்தோஷத்தையும் தருகிறது. ஒரு பெண் தையல், பின்னல், வர்ணம் தீட்டுதல் என்பவற்றைத் தெரிந்து கொள்வாளானால் பிள்ளைகளுக்குத் தானே செலவின்றி உடைகளைத் தைத்து வர்ணம் தீட்டிக் கொடுக்கலாம். அத்துடன் சுயதொழில் வாய்ப்பையும் செய்வதற்கு வழிசமைக்கிறது. இதனால் வருவாயும் பெருகுகின்றது. சுய தேவையும் பூர்த்தியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் நற்பிரஜைகள்" அவர்கள் நாட்டின் உன்னத பிரஜைகளாக வேண்டுமானால் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் உன்னதமாயிருத்தலும் அவசியம். இதற்கு ஒரு வீட்டில் சண்டை, சச்சரவு என்பன இருந்தல் தவிர்க்கப்பட வேண்டும். ஒருவர் மீது ஒருவர் அவநம்பிக்கை வைத்திருத்தல் கூடாது. இதற்கு கணவன், மனைவி ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். பெண்ணே இதற்கு மூல காரணமாக அமைகிறாள்.

எனவே ஒரு வீட்டில் பெண்ணானவள் தன்னை வளமாக்கிக் கொள்ளுதல் அவசியம். இதற்கு அடிப்படையாக அவள் கல்வியறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். அதிலும் "மனைப்பொருளியல்" கல்வியில் பயிற்சி பெற்றிருத்தல் சாலச்சிறந்து. ஆனால் வெறும் ஏட்டுச் சுரக்காய் போலல்லாது கற்பதற்கேற்ப நடத்தலும் வேண்டும். உத்தியோகம் பார்க்கும் பெண்ணாக இருந்தாலும் சரி, வீட்டில் மனைப்பெண்ணாக இருந்தாலும் சரி இவ்வாறான கூற்று பொருந்தும் என்றால் அது மிகையாகாது.

எனவே பெண்ணே! வாழ்வென்னும் வெகுமதியைக் கடவுள் நமக்கு வழங்கி இருக்கிறார். அதை நாம் வளமாக்கிக் கொள்ளுவோம்.

திருமதி. கிருபாதேவி உதயநாதன்
மனைப் பொருளியல் ஆசிரியர் ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம்
திருக்கோணமலை

## பள்ளின் வடிவமும் பொருளும்

பள்ளு எனும் பிரபந்தத்தின் அமைப்பை விளக்கும் வகையில் அதன் உள்ளடக்கப் பொருளை விளங்கிக் கொள்ளலாம். ஒரு நூலின் அமைப்பு அது கூறும் பொருளில் தங்கியிருக்கிறது என்பர். பள்ளுப் பிரபந்தத்தினுட் கூறப்படும் பொருள்களை இரண்டு முக்கிய பிரிவினுள் அடக்கலாம்.

1. மருத நில வருணனை
2. பாட்டுடைத் தலைவன் பெருமை

இவற்றுள் மருதநில வருணனை அந்நிலத்திற் பயிர்செய்யும் மக்களின் வாய் மொழியாக அமையும். பள்ளன், அவன் மனைவியான மூத்தப்பள்ளி, ஆசை நாயகியாகிய இளையபள்ளி, வேறு வேலை செய்யும் பண்ணையின் உரிமையாளனாகிய பண்ணைத் தலைவன் ஆகிய நான்கு பாத்திரங்கள் காவிய மேடையிற் தோன்றி உரையாடி நடித்துக்காட்டும் பான்மையிற் பள்ளு அமையும். இக்கதாபாத்திரங்களின் பெயர்கள் சூட்டப்படலாகா தென்பது மரபு. சங்ககால நூல்கள் பாத்திரப் பெயர் சூட்டாதது போன்று பள்ளு நூல்கள் இயற்பெயரால் அவரைச் சுட்டும். சில பள்ளு நூல்கள் அவர்தம் நாட்டின் பெயரால் அவரைச் சுட்டும். செருகலைப்பள்ளி – ஹோமாபுரிப்பள்ளி மகாவலிகங்கைப் பள்ளி முதலிய பெயர்களால் முறையே மூத்தப்பள்ளியும் இளைய பள்ளியும் என அழைக்கப்படுதல் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் பள்ளுப் பிரபந்தத்தின் கூறப்படும். திருமலை முருகன், தண்டிகைக் கனகராயன் முதலிய பெயர்களைக் கொண்டு இம்முடிவைப் பெறலாம். பாட்டுடைத் தலைவன் பெருமை கவிக்கூற்றாகவும் அமையும். கவிக்கூற்றாக வரும் பாடல்கள் இயற்றமிழ்ப் பண்புக்கு வெண்பா, கலிப்பா விருத்தம் முதலிய பா வகைகளில் ஆக்கப்படும்.

பாட்டுடைத் தலைவன் பெருமையைக் கவிக்கூற்றாக வரும் பாடல்களிலன்றி பள்ளியர் குடித்தரக்கூறல், தலைவன் பெருமை கூறல், நாற்று நடுகை முதலிய இயல்களை வருணிக்கும் போதும் ஆங்காங்கு விரவிக் கூறப்படும். முருகன், விநாயகன் முதலிய கடவுளரைப் பாட்டுடைத தலைவனாகக் கொண்ட கதிரை மலைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு என்பன தேவபாணி வகுப்பைச் சாரும். தண்டிகைக் கனகராயன் முதலிய பாவலர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு மிகப் பிற்காலத்தில் பள்ளு நூல்கள் எழுந்தன.

பள்ளியர் கூற்றாக வரும் பாடல்கள் சிந்து தரு ஏசல் முதலிய பாவினங்களில் அமையும். "சிந்து" எனும் பாவினமே பள்ளுப் பிரபந்தத்தின் உயிர்நாடி எனலாம். பள்ளன், பள்ளியர் கூற்றாக வரும் பெரும் பான்மையான பாடல்கள் 'சிந்து' என்னும் இசைத்தமிழ் வண்ணத்தில் அமையும். பொதுமக்கள் பாடியாடும் நாட்டுப்பாடல் மெட்டுக்களிற் சிந்து அமைகிறது.

மருதநிலத்து உரிப்பொருள் ஊடலாகும். இதுவே பள்ளுப் பிரபந்தத்தின் கதை வளர்ச்சியின் மையமாக விளங்குகிறது. எல்லாப் பள்ளு நூல்களும் பள்ளன் இரு பெண்டாட்டிக் காரணாக அமைகிறான். இளைய பள்ளியின் மூலம் ஊடல் உணர்த்தப்படுகிறது. மூத்தப்பள்ளி உத்தமப் பெண்ணாகவும், இளையபள்ளி ஓர் ஆடையலங்காரக் காரியாகவும், பள்ளனும் அவன் மனைவியான மூத்த பள்ளியும் ஒரே ஊரினர். அவனை மருட்டிய இளைய பள்ளி அயலூரினளாக அல்லது அயல் நாட்டினளாக வருணிக்கப்படுகிறாள்.

காவிய மேடையில் மூத்தபள்ளி முதலிலும், பின் இளையபள்ளியும், அதன்பின் பள்ளனும் தோன்றுகின்றனர். அவர் தம் குடிப் பெருமை கூறல், தலைவன் புகழ் கூறல், நாட்டு வளம் கூறல் ஆகியன பெரும்பாலான பள்ளு நூல்களில் மிகச்சிறு வேறுபாட்டுடன் அமைகின்றன. சில பள்ளு நூல்களில் நகர் வளங்கூறலும் காணப்படுகிறது. சோழர் காலத்து காவிய மரபுக்கேற்ப முதலில் கடவுள் காவிய மரபுக்கேற்ப முதலில் கடவுள் வணக்கம் கூறி, நாட்டு நகர வருணனைகளையுடைய தாய் தன்னிகரில்லாத் தலைவன் பெருமை கூறிப் பள்ளு எனும் காவியம் வழிநடக்கிறது.

பள்ளனும் அவன் மனைவி மூத்த பள்ளியினதும் நாடே பாட்டுடைத் தலைவனது நாடுமாகும். இளைய பள்ளி வேற்று ஊரினள் என்பதால் இருவள நாட்டுவளம் கூறப்படுவது பள்ளுகளின் அமைப்பாகும். எல்லாப் பள்ளு நூல்களும் "பள்ளியர்" ஒருவரையொருவர் 'ஏசல்' எனும் இயலுடன் முடிவு பெறுகின்றன. காவியத்தின் நடுவில் குயில், மழை, ஆற்றில் வெள்ளம் வருதல், விதைத்தல், நாற்று நடுதல், அருவி வெட்டுதல், சூடுவைத்தல் முதலிய மருதநில நெல் வேளாண்மை கால நிகழ்ச்சிகளை கொண்டமைந்திருக்கும்.

இவையனைத்தும் பள்ளியர் பாடலாக அமைகின்றன. இந்நிகழ்ச்சிகளிடையே ஊடலுரிப் பொருள் வருணிக்கப்படுகின்றது. நாடகத்தன்மை கொண்டு இவையனைத்துப் பாத்திர நிகழ்வுகளும் பள்ளுகளில் சிறப்பாக அமைந்திருக்கும்.


திருமதி. நீ. வரதராஜா
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாமைத்துவ குழு



மலர்க் குழு



மாணவ தலைவர்களுடன் கட்டொழுங்குக் குழு




அபிவிருத்திக் குழு



பாண்ட் வாத்தியக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் வகுப்பறை முகாமைத்துவம்

முகாமைத்துவம் என்பது எந்த ஒரு நிறுவனத்திலும் / ஒருங்கமைப்பிலும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதன் செயற்பாடுகளை செயற்றிறன் வாய்ந்த வகையில் மேற்கொள்ளும் சமூக செயற்பாடாகும். வகுப்பறை முகாமை என்பது வகுப்பறையில் கற்றலும், கற்பித்தலும் அதிக விளைத்திறனுடையவாறு நிகழத்தக்க சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் அதனை நடத்திச் செல்வதற்கும் அதற்குத் தேவையான மனித, பௌதீக, நேர வளங்களை வினைத்திறனுடையவாறு பயன்படுத்துவதற்குத் தேவையான உத்திகளை பயன்படுத்துவதற்கான முயற்சியாகும் எனலாம்.

### வகுப்பறை முகாமைத்துவத்தின் அவசியம் பற்றி நோக்குவோம்

* முதன்மையாக எதிர்பார்க்கப்படும் குறிக்கோளை அடையத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
* வினைத்திறன் அதாவது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை அடைதல்.
* வினைத்திறன் அதாவது வளங்களைக் கொண்டு உச்ச பயன் பெறுதல்.
* மனித கௌரவம் தொடர்பான நடத்தைப் பயிற்சி.
* ஐக்கியம், கூட்டுணர்வைக் கட்டியெழுப்புதல்.
* தனியே தாமாகவே வேலைகளைச் செய்து கொள்ளத்தக்கவாறாக மாணவரைச் சுயமாக நெறிப்படுத்தலின் பால் வழிப்படுத்தல்.
* உயிரோட்டமான / விருப்பத்திற்குரிய சூழலாக மாற்றுதல்.
* குழுவில் ஒத்துழைப்பு தொடர்பான உணர்வைப் பயிற்று வித்தலும் அனுபவங்களை வழங்குதலும்.

இக்குறிக்கோளை அடைவதற்காக சாதகமான, மனிதநேயமான பௌதீகச் சூழலை உருவாக்குதலானது வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் செயன் முறைக்கு இன்றியமையாதது.

மேலும் நல்ல ஒழுக்கத்தையும் சுய ஒழுக்கத்தையும் உருவாக்குவதற்காக வகுப்பறை முகாமைத்துவம் அவசியமானதாகும்.

வகுப்பறை முகாமையாளர் என்ற வகையில் ஆசிரியரின் முகாமைத்துவ பணிகள்.

| | |
|---|---|
| P - திட்டமிடல் | - Planing |
| O - ஒழுங்குபடுத்தல் | - Organization |
| D - நெறிப்படுத்தல் | - Direction |
| C - கட்டுப்படுத்தல் | - Control |

❖ திட்டமிடல்

திட்டமிடலில் அடிப்படை அம்சங்களாகிய குறிக்கோள்களைத் தீர்மானித்தல் குறிக்கோள்களை அடைவதற்கான முறைகளை தீர்மானித்தல் முக்கியமானது. வகுப்பறை மட்டத்தில் கலைத்திட்டம், பிள்ளையின் அடிப்படைத் தகவல்கள், சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள், பாடசாலையிலுள்ள வளங்கள், ஆசிரியர் தொடர்பான விடயங்கள், பாடங்கள் தொடர்பான விடயங்கள், இணைப்பாட விதான செயற்பாடுகள் தொடர்பாக கவனஞ்செலுத்துதல் வேண்டும். மேற்கூறப்பட்ட பணிகளின் போது திட்டமிடல் முக்கியத்துவம் பெறுவதுடன் அப்பணிகளின் நோக்கங்களை கட்டியெழுப்புவதற்கும் அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கும் உதவி புரிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ+ம்) ◆ பிள்ளையை இனங்காணல் தொடர்பான நடவடிக்கைகளை திட்டமிடல்.
◆ பாடசாலை சமுதாயத்திடமிருந்து எதிர்பார்ப்பவை.
◆ மனித, பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களை திட்டமிடல்.
◆ நல்லாசானுடைய பண்புகளை திட்டமிடல்.
◆ கற்பித்தல் முறைகளை திட்டமிடல்.
◆ இணைப்பாட செயற்பாடுகள் தொடர்பாக திட்டமிடல்.

❖ ஒழுங்கமைத்தல்

ஆசிரியர் தாம் ஒழுங்கு செய்த திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான பின்னணியை உருவாக்கிக் கொள்வதே 'ஒழுங்கமைத்தல்' எனப்படுகிறது.

(உ+ம்) ◆ இடவசதி, சுத்தம், ஒளியூட்டம், காற்றோட்டம், தளபாடங்கள், கற்றல் சாதனங்கள், மாணவரது
◆ ஆக்கங்களை ஒழுங்குபடுத்தல்.
◆ பௌதீக சூழலை தயார்படுத்தல்.
◆ வகுப்புத் தலைவர், பாடத்தலைவர் போன்ற வகுப்பறையின் ஒழுங்கமைப்புப் கட்டமைப்பு
◆ தொடர்பாக ஒழுங்கமைத்தல்.

❖ நெறிப்படுத்தல்

நாம் திட்டமிட்டு ஒழுங்கமைத்த பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காகப் பொருத்தமான தலைமைத்துவம் வழங்குதல். அப்பணிக்காக நெறிப்படுத்தல் ஆலோசனை வழங்குதல் 'நெறிப்படுத்தல்' எனப்படுகிறது.

(உ+ம்) ◆ ஒப்படைக்கப்பட்ட பணிகள் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்குதல்.
◆ மேற்பார்வை செய்தல், மதிப்பிடல் போன்றவை. (ஆட்களின் பல்வகைமை, மீளவலியுறுத்தல்
நெருக்கடியின் போது தீர்மானமெடுத்தல், அவற்றைத் தணித்தல்).
◆ மாணவரது பணிகளை நெறிப்படுத்தல்.
◆ மாணவருக்கு பாடவிடயங்களை வழங்கி நெறிப்படுத்தல்.
◆ கற்றல் பணிகளைக் கணிப்பிடல்.

❖ கட்டுப்பாடு

வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையின் இறுதி அம்சம் கட்டுப்பாடாகும். முகாமைத்துவம் செயன்முறைக்குரிய மேற்பார்வை, முடிவு, மதிப்பீடு ஆகிய பணிகள் தொடர்பான முன்னேற்றக் கட்டுப்பாடு செயன்முறையே 'கட்டுப்பாடு' என கருதப்படுகிறது.

(உ+ம்) ◆ இடையிடையே மதிப்பிடல், பதிவு அறிக்கை பேணல்.
◆ திட்டத்திலிருந்து விலகினால் மீளத்திட்டமிடல்.
◆ வகுப்பறை முகாமைத்துவ பிரச்சனைகள்.
◆ வளர்ப்பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள்
(இடவசதி போதாமை, புதிய வளங்களை பயன்படுத்துவதற்கு பயிற்சி பெற்றோர் அவசியம்).
◆ மாணவர் தொடர்பான பிரச்சினைகள்
(பாடசாலை வருகை தராமை, இடைவிட்டு வருகை தருதல், மாணவர் அடைவில் நலிவுகள், பாதகமான வீட்டுச்சூழலில் இருந்து வருதல், ஒழுங்கீனப் பிரச்சினை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோரின் உதவி தொடர்பான பிரச்சினை
  (பெற்றோரின் அறிவின்மை, வேலைப்பளு, பாடசாலை தொடர்பாகக் கவனயீனம்)
- நிர்வாகப் பிரச்சினைகள்
  (மாணவர் தொகை அதிகமாயிருத்தல் புறவாரி சேவைகளுக்காக கற்றலுக்கு நேரம் குறைவு, பதிற் கடமை நேரசூசி நடைமுறைப்படுத்தாமை).

பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

- பெற்றோர் – சமுதாய ஒத்துழைப்பு பெறுதல்.
- பயிற்சியளித்தல் - அறிவூட்டல்
- மாற்று வளங்களை பயன்படுத்துதல்.
- ஆசிரியரின் அர்ப்பணிப்பு
- ஆசிரியர் – மாணவர் மனப்பாங்கு விருத்தி

இவ்வாறான விடயங்களை நாம் அறிவதினூடாக வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனுடையதாகவும் அமைத்துக்கொள்ளளாம்.

செல்வி. டர்ஜினி தேவராஜ்
நடன ஆசிரியை
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்

## புவியியல் கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. Apophasis | - | தீப்பாறை முனை |
| 2. Astronomy | - | வானியல் |
| 3. Ash volcanic | - | எரிமலைச் சாம்பல் |
| 4. Ash core | - | சாம்பற் கூம்பு |
| 5. Atmosphere | - | வளிமண்டலம் |
| 6. Autumn | - | இலையுதிர் காலம் |
| 7. Basin. River | - | ஆற்றுவடி நிலம் |
| 8. Bathysphere or Barysphere or Centrosphere | - | கோளவகம் |
| 9. Bay | - | குடா |
| 10. Canyon, (Canon) | - | ஆற்றுக் குடைவு |
| 11. Cancer, Tropic of | - | கடகக்கோடு |
| 12. Chart | - | தீக்கற்பாறை |
| 13. Centrospheres | - | மையக்கோளம் |
| 14. Seismic | - | பூமி நடுக்க மையம் |
| 15. Climate | - | காலநிலை |
| 16. Arid | - | வரண்ட காலநிலை |
| 17. Coal | - | நிலக்கரி |
| 18. Colonization | - | குடியேற்றம் |
| 19. Cone | - | கூம்பு |
| 20. Volcanic | - | எரிமலைக்கூம்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. Con desertion | - | ஒடுங்கல் |
| 22. Concave slope | - | குழிவுச்சாய்வு |
| 23. Contour | - | சமவுயரக் கோடு |
| 24. Contraction | - | சுருங்கல் |
| 25. Conviction | - | மேற்காவுகை |
| 26. Convex slope | - | குவிவுசாய்வு |
| 27. Coombe | - | குழிவு பள்ளத்தாக்கு |
| 28. Core | - | உள்ளீடு |
| 29. Lime stone | - | முருகைக்கல் |
| 30. Carrie or cirque | - | வட்டக்குகை |
| 31. Corrosion | - | சுரண்டல் - அறிப்பு |
| 32. Lateral | - | பக்க சுரண்டல் |
| 33. Crag | - | குத்துப்பாறை |
| 35. Crater volcanic | - | எரிமலைவாய் |
| 36. Crystal rock | - | பளிங்குப்பாறை |
| 37. Cyclone | - | சூறாவளி |
| 38. Sedimentary | - | அடையற்படிவு |
| 39. Deforestation | - | காடழித்தல் |
| 40. Delta | - | சுழிமுகம் |
| 41. Dendritic drainage | - | மரநிகர் வடிகால் |
| 42. Density | - | அடர்த்தி |
| 43. Of population | - | குடியடர்த்தி |
| 44. Dew | - | பனி |
| 45. Dew - point | - | பனிபடுநிலை |
| 46. Fault | - | சாய்வுக்குறை |
| 47. Slope | - | சாய்வுச் சரிவு |
| 48. Downs | - | புன்னிலம் |
| 49. Do line | - | மூடுபள்ளம் |
| 50. Pattern | - | வடிகாலமைப்பு |
| 51. Drought | - | வரட்சி |
| 52. Dune | - | மணற்குன்று |
| 53. Crust of the | - | புவியோடு |
| 54. Epeirogenesis movements of the | - | புவியின் கண்டவாக்கவசைவு |
| 55. Movement of the | - | புவியசைவு |
| 56. Revolution of the | - | புவியின் சுற்றுகை |
| 57. Rotation of the | - | புவிச்சுழற்சி |
| 58. Structure of the | - | புவியமைப்பு |
| 59. Earth quake | - | பூமிநடுக்கம் |
| 60. Epeirogeny | - | கண்டவாக்கம் |
| 61. Epicenter | - | மேல்மையம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 62. Torrid | - | வெப்பவலயம் |
| 63. Temperate | - | இடை வெப்பவலயம் |
| 64. Planet any | - | கோட் காற்று |
| 65. Trade | - | வியாபாரக் காற்று |
| 66. Wind - rose | - | காற்றுக் கோட்டுப்படம் |
| 67. Wind System | - | காற்றுத் தொகுதி |
| 68. Waterlines | - | மேலைக்காற்று |
| 69. Elements | - | வானிலை மூலகங்கள் |
| 70. Chemical | - | இரசாயன முறையாதல் |
| 71. Weir | - | அணைக்கட்டு |
| 72. Dormant | - | ஹங்கெரிமலை |
| 73. Extinct | - | எரிந்த எரிமலை |
| 74. Ventilation | - | காற்றோட்டம் |
| 75. Vale | - | பள்ளத்தாக்கு |
| 76. Hanging | - | தொங்கு பள்ளத்தாக்கு |
| 77. Transverse | - | குறுக்கு பள்ளத்தாக்கு |
| 78. Turbulence | - | கொந்தளிப்பு |
| 79. Typhoon | - | தைபூன் |
| 80. Trellised drainage | - | அளியடைப்பு வடிகால் |
| 81. Tremor | - | அதிர்ச்சி |
| 82. Trench | - | அகழி |
| 83. Trigonometrical Station | - | திரிகோண கணித நிலையம் |
| 84. Capricorn | - | மகரக்கோடு |
| 85. Troposphere | - | மாறன் மண்டலம் |
| 86. Track | - | சுவடு |
| 87. Topography | - | இடவிளக்கவியல் |
| 88. Equator | - | வெப்பமத்திய கோடு |
| 89. Thrust fault | - | உதைப்புக் குறை |
| 90. Tension | - | குமுவிசை |
| 91. Globe | - | புவிமத்திய கோடு |
| 92. Subsidence | - | படிதல் |
| 93. Storin | - | புயல் |
| 94. Steep slope | - | குத்துசாய்வு |
| 95. Solar system | - | ஞாயிற்றுத் தொகுதி |
| 96. Soil | - | மண் |
| 97. Dip | - | சரிவுச்சாய்வு |
| 98. Focus | - | புவி நடுக்க குவியம் |
| 99. Serae | - | பனிக்கட்டி தூண்கள் |
| 100. Shelf Continental | - | கண்ட மேடை |

செல்வன். செ. சோபிநாத்
13 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புண்ணும், வாய்ப்புற்று நோயும்

இன்று எம்மிடையே காணப்படும் பொதுவான நோய்களில் வாய்ப்புண் மற்றும் வாய்ப்புற்றுநோய் என்பன முக்கியமானதாகும். இவற்றை வராமல் தடுப்பதும், இந்நோய் ஏற்படும் போது அதன்ஆரம்ப காலத்தில் கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சைகளை பெறுவதும் இதன் தாக்கத்தைக் குறைத்து இந்நோயிலிருந்து முற்றாக விடுபடுவதற்கான வழிகளாகும்.

**வாய்ப்புண்**

✓ இது பொதுவாக சிறு பராயத்திலேயே காணப்படும். அதன் பின் இதன் தாக்கம் குறைவடைந்து கொண்டே செல்லும்.
✓ இது மீண்டும் மீண்டும் வருகின்றன. நோவுடன் கூடிய வட்டம் அல்லது நீள்வட்ட வடிவாக காணப்படும்.
✓ நரைநிறம் வெண்ணிற மையப்பகுதியையும் சிறிய சிவப்பு நிற துளையையும் கொண்டதாக இப்புண் காணப்படும்.
✓ சிறிய புண் (<10mm விட்டமுடையது). தழும்புகளின்றி 14 நாட்களில் குணமாகும்.
✓ பெரியதான புண் (>10mm விட்டமுடையது). தழும்புகளும் காணப்படும்.

**வாய்ப்புண் ஏற்படுவதற்கான காரணங்கள்**

* இரும்புச்சத்து குறைபாடு
* போலிக் அமில குறைபாடு
* விட்டமின் B12 குறைபாடு
* வாய்ப்புண்களில் சில இரப்பை, குடல் நோய்களுடன் சேர்ந்து காணப்படும்.

**வாய்புற்றுநோய்**

* வாயிலுள்ள உடற்கலங்களில் ஏற்படும் கட்டுப்பாடற்ற அசாதாரண கலப்பிரிவு வாய்ப்புற்றுநோய் ஆகும். இதன் விளைவாக கலங்கள் மாறுபட்ட வடிவமுடையதாக, மாறுபட்ட பருமனுடையதாக, ஊடுருவும் மற்றும் பரவும் இயல்பு கொண்டதாக மாற்றமடைகின்றன.
* இலங்கையில் வயது முதிர்ந்தோரை அதிகளவு பாதிக்கும். புற்றுநோய் வாயிலேயே ஏற்படுத்துகின்றது. (50 வயதுக்கு மேல்).
* வாய்ப்புற்றுநோயின் முன்நிலையை அதன் ஆரம்ப காலத்திலும் இலகுவாக இனங்காண முடியும்.
* ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான குணமடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்கி, வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கலாம்.
* இதன்போது பெரும்பாலும் பாதிக்கப்படுவது வாயின் கீழ் தளம் மற்றும் நாவின் இருபக்கங்களு மாகும்.

**வாய்ப்புற்றுநோய் ஆரம்பநிலை**

* வாயில் புற்றுநோய் ஏற்படுவதற்கு முன் வாய் மென்சவ்வில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அதாவது வாயில் நீண்ட காலமாக காணப்படும். நீக்கமுடியாத வெண்படலம் அல்லது வெள்ளை, சிவப்பு படலங்கள்.
* வாயின் மென்சவ்வில் ஏற்படும் எரிவுத் தன்மையான புண்.
* வாய் உள்ளக மேலணி, நாக்கு மற்றும் உதடு என்பவற்றில் மாறாது இருக்கும் புண். இது பெரும்பாலும் நோவற்றதாக காணப்படும்.
* உணவு அரைத்தல் அல்லது விழுங்குவதில் கடினத்தன்மை.
* வாய்த் திறத்தலும், நாக்கை நீட்டுதலும் படிப்படியாகக் குறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வாயில் அல்லது கன்னத்தில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படல்.
* கதைப்பதில் கஷ்டமாக இருத்தல்.
* வாய்ப்பகுதியில் உணர்ச்சியின்மை ஏற்படல்.
* வாயிலிருந்து இரத்தம் வருதல்.

**வாய்ப்புற்று நோய் ஏற்படுவதற்கான காரணிகள்**

1. புகையிலை பாவித்தல்:- சிகரெட், பீடி, சுருட்டு புகைப்பதனால் அல்லது அருகில் இருந்து அப்புகையை உள்வாங்குவதனால் அல்லது புகையிலையை மென்று உண்பதினால் வாய்ப்புற்றுநோய் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது.
2. வெற்றிலை பாவித்தல்:- புகையிலை, பாக்கு என்பவற்றை பாவித்தல்.
3. மதுபானம் அருந்துதல்:- சாராயம், புளித்த கள், கசிப்பு என்பன உட்கொள்வதனால் அதன் எரிவுத் தாக்கத்தின் மூலம் வாய் மற்றும் தொண்டைப் புற்றுநோய் ஏற்படும்.
4. வாய்ச்சுகாதரமின்மை.
5. நீடித்த காலமாக உராய்வு அல்லது உறுத்துதல்:- கூரான அல்லது உடைந்த பற்கள் உறுத்துதல், சூடான மற்றும் உறைப்பான உணவு உட்கொள்ளல். நன்றாகப் பொருந்தாது இருக்கும் கட்டிய பற்களை அணிதல் என்பவற்றால் ஏற்படும்.
6. போசாக்குக் குறைபாடு:- குறிப்பாக விற்றமின் A இரும்புச்சத்து குறைபாடு.
7. கவனிக்கப்படாதுள்ள வாய்ப்புற்றுநோய் முன்நிலை.
   வாய் மேலணியில் உள்ள அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்புகள் கவனிக்கப்படாது விடப்படுமிடத்து வாய்ப்புற்றுநோயாக மாற்றமடைய அதிக வாய்ப்புகள் உள்ளன.

**தடுப்பு வழிகள்**

1. வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு பாவிப்பதை தவிர்த்தல்.
2. புகைப்பதை தவிர்த்தல்.
3. வாய் சுகாதாரம் பேணுதல்.
4. மதுபானம் அருந்துவதை தவிர்த்தல்.
5. பல்லில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் உடன் பல் வைத்தியரின் ஆலோசனையை நாடுதல். பொருந்தாத கட்டிய பல்லை அணியாது இருத்தல்.
6. பச்சை நிற இலைவகைகளையும், மஞ்சள் நிற பழங்களையும் உட்கொள்ளுதல்.
7. அளவுக்கதிகமாக மிளகாய் பாவிப்பதை தவிர்த்தல்.
8. வாய்ப்புற்றுநோய் ஆரம்பநிலையை கண்டவுடன் உடன் வைத்தியரை நாடவும்.

குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறையேனும் முகம் பார்க்கும் கண்ணாடியில் எங்கள் வாயை அவதானித்துப் பாருங்கள். வாய்புற்றுநோயின் எச்சரிக்கை அறிகுறிகள் காணப்படுமிடத்து, வைத்தியர் ஒருவரை நாடி ஆலோசனை பெறுவதன் மூலமும் மேற்கூறப்பட்ட பாதகமான பழக்கவழக்கங்களை மாற்றி பாதகமான காரணிகளை தவிர்ப்பதன் மூலம் நோயின் ஆரம்ப நிலையிலேயே குணமடையும் வகையிலான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்நோயிலிருந்து முற்றாக விடுபடமுடியும்.

நல்ல வாய்ச்சுகாதாரப் பழக்கவழக்கங்களும் சரியான சிகிச்சையும்
வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும்.

**வைத்தியர்**
**Dr. திரு. அருமைநாதன் ஸதீஸ்குமார் M.B.BS**
**பொது வைத்தியசாலை**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் மாற்றொலியன்கள் பயன்படும் விதம்

இன்றைய நடைமுறையில் சொற்கள் பயன்படும் விதம் பலவாறாகும். சொற்கள் உச்சரிக்கும் போதும், ஒலிக்கும் போதும் பயன்பாட்டில் பலமாற்றங்களைக் காணலாம். மெய்யெழுத்துக்களில் பல வேறுவிதமாக ஒலிப்பதைக் காணலாம். இவற்றை மாற்றொலியன்கள் என்பர். வல்லின மெய் ஆறும், ஒன்றுக்கு அதிகமான ஒலிக்குறிப்புகளுடன் ஒலிக்கின்றன.

உதாரணமாக 'க' மெய்' பின்வரும் சொற்களில் வேறுபட்டு ஒலிப்பதைக் காணலாம்.

- காகம் - Ka, Ha
- தங்கம் - Ga
- கண் - Ka
- காது - Ka, Ha
- கண்டி - Kandy
- கம்பஹா - Gampaha
- கம்பாந்தோட்டை - Hampanthuta
- கொழும்பு - Colombo
- காசிம் - Casim

இவ்வாறு ஒவ்வொரு சொற்களிலும் வேறுபட்டு ஒலிப்பதை மாற்றொலியன் எனக் கூறலாம். இங்க 'க' என்னும் மெய் மூன்று விதமாக ஒலிக்கிறது. இவ்வாறு ஒரே எழுத்துக்கள் மாறி ஒலிப்பதை மாணவர் மத்தியில் அறிமுகம் செய்தல் எமது கடப்பாடாகும்.

மாற்றொலிகளாக "ச" என்னும் மெய் உச்சரிக்கப்படும் போது ஒலி வேறுபாடடைகிறது.

| | | |
|---|---|---|
| சதம் | - | Sa |
| சரம் | - | Sa |
| குஞ்சம் | - | Ja |
| கொஞ்சம் | - | Ja |
| தஞ்சம் | - | Ja |
| சர்ச்சை | - | Ch |
| மச்சாள் | - | Ch |

பச்சபாதம்

இவை தவிர "ட, த, ப, ற" ஆகிய மெய் எழுத்துக்களும் மாற்றொலியன்களாக ஒலிக்கின்றன.

(உ+ ம்)

| | |
|---|---|
| தடம், மண்டம், சட்டம் | "ட" கர மெய் மாறி ஒலித்தல் |
| நாதம், பந்தம், தப்பு | "த" கர மெய் மாறி ஒலித்தல் |
| கப்பம், அப்பம், சம்பல், சம்பல் | "ப" கர மெய் மாறி ஒலித்தல் |
| அறம், பன்றி, கற்று | "ற" கர மெய் மாறி ஒலித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரிப்பின் போது 'னகர', 'ரகர' மெய்கள் 'தகர', 'கரக' மெய்களின் இடையில் வரும்போது மாறி ஒலிக்கும்.

தனம்
கனம்
மனம்
னரம்

இச் சொற்கள் நாம் பயன்படுத்தப்படும் போது "அ" என்ற ஓசையினைக் கேட்கலாம். இவ்வாறு பல உச்சரிப்புக்கள் மாணவரிடையே அறிமுகம் செய்யலாம். சில எழுத்துக்கள் உச்சரிப்பின் போது ஒத்த ஓசை உடையவையாக ஒலிப்பதைக் காணலாம். அதாவது உச்சரிப்பின் போது எந்தவித ஒலி வேறுபாடுகளுமின்றி ஒரே சமனான ஓசையினை ஏற்படுத்தும் 'ந' கரம் சொல் முதலிலும்

(உ+ ம்) "ந" கர மெய் "ன" கரம் போலவே ஒலிப்பதைக் காணலாம்.

நான், நாய், நன்றி, செத்தல், செய்ந்நன்றி.

சில எழுத்துக்கள் உச்சரிப்பின் போது அந்த எழுத்திற்குரிய ஓசை இல்லாமல் ஒலிக்கும். அதாவது அனுமதி பெற்று ஒலிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| (உ+ ம்) | கைம்மாறு | - | இங்கே 'ம்' அமைதி பெற்றுள்ளது. |
| | கைந்நூல் | - | இங்கே 'ந்' அமைதி பெற்றுள்ளது |
| | கைம்மாலை | - | இங்கே 'ம்' அமைதி பெற்றுள்ளது. |

சில சொற்கள் உச்சரிப்பிற்கேற்ப எழுத்து வடிவம் பெறுவதில்லை. இவற்றை நடைமுறைப் பயன்பாட்டில் காணலாம். தவறான வழக்கு அடைப்புக்குறிக்குள்

| | | |
|---|---|---|
| முயற்சி | - | (முயர்ச்சி, முயற்ச்சி) |
| பயிற்சி | - | (பயிர்ச்சி, பயிற்ச்சி) |
| பெயர்ச்சி | - | (பெயற்சி, பெயற்ச்சி) |
| ஆராய்ச்சி | - | (ஆராச்சி, ஆராட்சி) |
| காய்ச்சல் | - | (காச்சல்) |
| களஞ்சாரம் | - | (களச்சாரம்) |
| புகழ்ச்சி | - | (புகட்சி) |
| உற்சவம் | - | (உற்ச்சவம், உட்சவம்) |
| ஈர்க்கு | - | (ஈக்கு) |
| நிகழ்ச்சி | - | (நிகட்சி) |
| ஒத்தடம் | - | (ஒத்தணம், ஒற்றடம்) |
| பயிலுநர் | - | (பயிலுனர்) |
| நடத்துநர் | - | (நடத்துனர்) |
| அடைமழை | - | (அடமழை) |
| கட்டடம் | - | (கட்டிடம்) |

திரு. S. ரவீந்திரன்
ஆசிரியர்
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கூறும் அறக்கருத்துகள்

பன்டைய தமிழ் மக்கள் சமயம் இன்றி வாழ்க்கை இல்லை என்ற கருத்துடையவராய் வாழ்ந்தனர். மேலை நாட்டவர் போல் சமயம் வாழ்க்கையின் ஒரு பாகம் என்று கொள்ளாமல், சமயம் வாழ்க்கை முழுதும் அவாவி நிற்கின்றது என்ற கருத்து அவர்களிடம் காணப்பட்டது. வாழ்க்கைக்கு ஈடேற்றம் அளிப்பது சமயம் என்பது எமது முன்னோர்கள் பண்பாடு ஆகும்.

சமயநெறி நின்று உலகியலோடு இணைந்து வாழ்வதற்கு அமைந்த நெறிகளை தமது உயரிய சிந்தனைகளால் அற நூல்களாக வகுத்துத் தந்துள்ளனர் ஆன்றோர். சங்ககாலந் தொட்டு தமிழ்ச் சான்றோர் செய்த நூல்கள் பல துறைகளில் அமைந்தவையாயினும் அறநூல்களுள் தலைமை பெற்று விளங்குவது திருக்குறள் எனலாம்.

வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதப்படும் நான்கு உறுதிப் பொருள்களுள் அறம், நெறி, பொருள், இன்பம் ஆகிய மூன்றின் தன்மைகளையும் மேம்பாடுகளையும் உணர்த்திய வள்ளுவர் தம் நூலை முப்பாலாக வகுத்துக் கொண்டார். அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் 'திரிவர்க்கம்' என்பர்.

வீடு பற்றிய நம்பிக்கை வள்ளுவருக்கு உண்டெனப்பது நேரடியாக உணர்த்தப்படா விடினும் குறிப்பால் உணர்த்தியுள்ளார். "மற்றீண்டு வாராநெறி" என வீடு பேற்றைக் குறிக்கின்றார். திருக்குறள் ஓர் உலகப் பொது நூலாக அனைத்து மொழி அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எல்லா இனத்தவர்களுக்கும், எல்லா மதத்தினர்க்கும், எல்லா மொழியாளர்கட்கும் ஏற்புடைய மாறுபாடற்ற கருத்துக்களையே வள்ளுவர் தம் நூலில் திரட்டித் தந்துள்ளார். திருக்குறளில் கூறப்படும் அறநெறி எல்லோர்க்கும் உடன்பாடாய் நிகழ்வது.

திருக்குறளை ஒரு விளக்கமாக உருவகம் செய்துள்ளார் ஓர் ஆசிரியர். நாம் தினம் ஏற்றும் தீபம் புறவிருளை நீக்க உதவுவது போல அகவிருளை அகற்ற உதவுவது வள்ளுவர் வாய் மலர்ந்த குறள் விளக்கு. இந்த விளக்கு தருமமாகிய தகளியும் பொருளாகிய திரியும், இன்பமாகிய நெய்யும் செவ்விய சொற்களாகிய சுடரும் குறட்பாவாகிய தண்டும் உடையது.

"அறம் தகளி ஆன்றபொருள் திரி இன்பு
சிறந்த நெய் செஞ்சொல் தீ தண்டு - குலும்பாவா
வள்ளிவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு"

மனிதகுலம் வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது வள்ளுவர் வாய் மொழி. அதாவது சான்றோர் காட்டிய நெறியில் நின்று காப்பன காத்து, கடிவன கடிந்து பிறர் துன்பம் துடைக்க முயன்றும் உதவியும் வாழுதல் எனப்படும்.

உலகில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை இல்றைம், துறவறம் என இருவகைப்பட்டது. ஒரு கற்புடைய பெண்ணை மணந்து இல்லத்தில் இருந்து அறம் செய்து வாழ்வது இல்லமாகும். உலகப் பற்றை ஒழித்து வீடு பேறு அடையும் நோக்கில் தவத்தில் ஈடுபடுவது துறவறமாகும். இவற்றில் இல்லறத்தையே சிறந்ததாகக் கொண்டனர் தமிழர். அதனால் தான் வள்ளுவரும் இல்லறவியலை முதலில் அமைத்துக் கொண்டார். துறவறம் பூண்டோர்க்கும் இல்லறத்தாரின் துணை இன்றியமையாது வேண்டப்படுகிறது.

இல்றைம், துறவறம் ஆகிய வாழ்க்கை ஒவ்வொன்றும் நல்லதும் தீயதும் என இருவகைப்படும். இல்லறத்தை மேற்கொண்டாலும் துறவறத்தை மேற்கொண்டாலும் அதற்குரிய ஒழுக்கத்தைப் பேணி அதனின்றும் பிறழாது வாழ்தலே வையத்து வாழ்வாங்கு வாழ்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் கூறும் அறம் என்பது ஒழுக்கம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா யியன்றது அறம்"

என்னும் குறளில் நல்லொழுக்கம் வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு இல்லத்தார்க்கு விருந்தோம்பல், ஈகை முதலிய பண்புகள் சிறப்பாகவும் துறவறத்தார்க்கு தவம், அருளுடைமை, அவா துறத்தல் என்பனவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்று குறள் எதிர்மறை முகத்தால் பொருளை வலியுறுத்தும் ஆற்றலுக்கு ஓர் இனிய எடுத்துக்காட்டு எனலாம்.

திருக்குறள் 'மற்றீண்டு வாராநெறி யாகிய வீடுபற்றி கூறுவது இவ்வுலக வாழ்க்கைச் சிறப்புக்கு வேண்டியவற்றையே தேர்ந்தெடுத்து செப்பிச் சொல்கின்றது. வாழ்வு நெறிப்பட்டும், இசைவுபட்டும் அமைவதற்கு தனிமனிதன் செய்யவேண்டிய அறங்களை அறத்துப்பாலில் எடுத்துக்கூறிய பின்னர் கூட்டமாக வரும் மக்கட் சமூக நலனைக் கவனிக்கும் கட்டுப்பாடுடைய அரசியலாரின் பொறுப்புக்களையும் நெறி முறைகளையும் பொருட்பாலில் எடுத்து விளக்குகின்றார் வள்ளுவர்.

பொருட்பால், நல்ல அரசாட்சி, அரசியலில் ஈடுபடுவோரின் கடமை, நற்குடிகளின் இயல்பு முதலிய உலக வாழ்க்கையின் பல துறைகளை விளக்கி நிற்கின்றது.

மூன்றாவதாகிய காமத்துப்பால் வாழ்க்கையில் பெறத்தரும் இன்பத்தையும் அன்பின் மாட்சியையும் கூறுகின்றது. ஆணும் பெண்ணும் உள்ளத்தால் ஒன்றி, உணர்வால் கலந்து, அன்பால் பிணைந்து வாழும் வாழ்க்கையை காதற்காட்சிகளாக நாடகமாக்கி கண்முன் நிறுத்துகின்றார்.

தலைவனும் தலைவியும் உரையாடிக் கொண்டிருந்தனர். இடையில் தலைவன் தும்மினான். தமிழர் வழக்கப்படி, தும்மியவுடன் நூற்றாண்டு வாழ்க எனத் தலைவனை வாழ்த்தினாள். கணப்பொழுதில் அவள் உள்ளத்தில் ஓர் ஐயம் உதயமாயிற்று. இவருக்கு யாரோ ஒரு பெண்ணின் நினைவு வந்ததனாற் தான் தும்மல் ஏற்பட்டது என்று எண்ணினாள். உடனே கோபம் அழுகையாக மாறியது. அழுகையினூடே தலைவனை கடிந்து பேசுகிறாள். "நான் இருக்கும் போது இன்னுமொரு பெண்ணை எண்ணித் தானே உமக்குத் தும்மல் ஏற்பட்டது" என்று சீறினாள். தலைவியின் இச்செயலை எண்ணி வியந்தும் மகிழ்ந்தும் நின்றான் தலைவன். இக்காட்சியை ஏழு சொற்களால் அமைந்த குறள் ஒன்றில் சித்தரிக்கின்றார் வள்ளுவர்.

"வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
ஆருள்ளித் தும்மினார் என்று"

இவ்வாறாக உலகியல் வாழ்க்கை ஒழுக்க சீலமும், உயர்ந்த கருத்துக்களும், உன்னத இன்பமும் உடையதாக அமைவதற்கு திருக்குறள் உறுதுணையாக நிற்கின்றது.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
குறுகத் தறித்த திருக்குறள்"

என்ற ஔவையார் வாக்கினால் திருக்குறளின் பெருமையும், அறக் கருத்துக்களின் ஆழமும், சிந்தனை உயர்வும் உணர்த்தப்படுகின்றது.

திருமதி. S. கிருபாகரன்
ஆசிரியை
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் என்ன கறிவேப்பிலையா?

செல்வி யோசித்தாள். யோசிக்க யோசிக்க தன்மேலேயே ஆத்திரமாக உள்ளது. நியாயப்படி அவள் ஆத்திரப்பட வேண்டியது தன்னைப் படைத்த கடவுள் மேலே தான். ஆனால் அவள் நல்லவள் ஆகையால் தன்னையே நொந்து கொண்டாள். என்ன செய்வது ஏழையாகப் பிறந்தாள் அனுபவித்துத் தானே ஆக வேண்டும். "ஏழையாகப் பிறந்தது என்னுடைய தவறா?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். இதற்குக் காரணம் அவளுடைய முதலாளி தான். ஆம்.

செல்வி. திரு. சிவபாலன் சுந்தரி தம்பதிகளிடம் வேலைக்குச் சேர்ந்து ஐந்து ஆண்டுகள் முடியப் போகின்றது. மாதம் எட்டாயிரம் சம்பளம் என்று சொன்ன படியால் தான் செல்வி தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக கால் இழந்த தந்தையையும், ஏழைத் தாயையும், இரு தங்கைகளையும் விட்டுவிட்டு பதினைந்து வயது சிறுமியாக இருக்கையில் சிவபாலன் சுந்தரி தம்பதிகளிடம் கண்ணுக்கெட்டாத தொலைவில் வந்து வேலை செய்தாள்.

செல்வி வந்த புதிதில் அவளுடைய எஜமானி அவளை நல்லபடியாகத் தான் கவனித்துக் கொண்டாள். செல்வி சிறுமியாக இருந்த காரணத்தினால் அவளிடம் அதிக வேலையும் வாங்கவில்லை. செல்வியும் தாய், தந்தை, தங்கைகளை பிரிந்து வந்த கவலையில் சிறிது நாள் இருந்தாலும், எஜமானியின் அரவணைப்பில் தனது கவலையை மறந்தாள். செல்வி அறுவடைக்கு நட்ட நாற்றினைப்போல் வளர்ந்தால். பருவ மங்கைக்கு ஏற்ற அழகுடன் விளங்கினாள். அவளுடைய அழகிய தோற்றமும், கலகலத்த சுபாவமும் அங்கிருந்த அனைவரையும் கவர்ந்தது. ஆனால் அவளது முதலாளி மட்டும் அவளை வெறுத்து ஒதுக்கினார். காரணம் அவளது ஏழ்மை. இதன் காரணத்தினால் "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல சிவபாலனுக்கு செல்வி என்ன செய்தாலும் தப்பாகவே விளங்கியது.

அன்றும் அப்படித்தான் செல்வி வீட்டைப் பெருக்கிக் கொண்டு இருந்தாள். எஜமானி அவளைக் கூப்பிட்டு "செல்வி ஐயா வெளியே உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருக்கிறார். இந்தத் தேநீரை கொண்டுபோய் ஐயாவிடம் கொடுத்துவிட்டு வந்து வீட்டைப் பெருக்கு" என்றாள். இதைக் கேட்ட செல்வி "அம்மா உங்களுக்குத்தான் தெரியுமே ஐயாவுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது என்மேல் எவ்வளவு கோபமாக இருக்கிறார் என்று பின்னர் நீங்களே....." "என்ன செல்வி ஏதோ இன்று தான் ஐயாவைப் பற்றி உனக்குத் தெரியும் என்பது போல் கதைக்கின்றாய். அவர் அப்படித்தான். எனக்கு நிறைய வேலை இருக்கு இதைக் கொண்டு போய் நீயே ஐயாவிடம் கொடுத்துவிடு" என்று கூறிவிட்டு தனது வேலையை கவனிக்கத் தொடங்கினாள் எஜமானி.

செல்விக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எப்படியும் எஜமானிடம் திட்டு வாங்கத்தான் வேண்டும். சரி என்ன நடக்கப் போகிறதோ? நடப்பது நடக்கட்டும் என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, தனது நடுங்கும் கரங்களினால் தேநீரை எடுத்துக்கொண்டு முதலாளி அமர்ந்திருக்கும் நாற்காலியை நோக்கிச் சென்றாள். "ஐ....யா... அம்...மா.. தடுமாற்றத்துடன் நடுங்கியபடியே சொன்னாள். இதைக் கேட்டு கோபத்தில் நிமிர்ந்த எஜமான் கண் சிவக்க "சுந்தரி ஏய்.... சுந்தரி நீ அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் உன்னால் முடியுமென்றால் தேநீரைக் கொண்டு வந்து தா முடியாவிட்டால் தேவையில்லை, அதை விட்டுட்டு கண்ட கண்ட கழுதைகளிடம் எல்லாம் தேநீரை கொடுத்து விட்டிருக்கிறாயே உனக்கு அறிவில்லையா?" என்று கோபத்தில் கத்தி விட்டு செல்வியின் கையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர் கோப்பையையும் தட்டி விட்டு விறு விறு என்று அவரது அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டார்.எஜமான் தன்னை கழுதை என்று திட்டுவார் என்று எதிர்பாராத செல்வி திக்பிரமை பிடித்தாற் போல் நின்றாள்.

உள்ளே சமைத்துக் கொண்டிருந்த சுந்தரி தனது கணவனின் அதட்டல் குரல் கேட்டு பதற்றத்துடன் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். செல்வி. தேநீர் கொட்டிய ஆடையுடனும், வெந்து போன கையோடும், தேநீர் ஊற்றுப்பட்டதுக் கூட தெரியாமல் சிலைப்போல் நின்று கொண்டிருந்தாள். இதைக்கண்ட எஜமானியார் செல்வியை கூப்பிட்டார் பதில் இல்லை. பின்பு "செல்வி செல்வி" என அவளைப் போட்டு உலுப்பினார். அப்பொழுது தான் சுயநினைவுக்கு வந்தாள் செல்வி. அப்பொழுது தான் அவளுக்கு வலிக்கவும் தொடங்கியது. அவளுக்கு வலித்தது தேநீர் கொட்டிய வெந்த கையல்ல, அவளது இளகிய மனம். அவளது அழகிய முகம் மாறியது. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. என்றாலும் தனது எஜமானியின் முன் அழுவது நல்லதல்ல என தெரிந்து தனது அழுகையை அடக்கினாள். சுந்தரி அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு, மருந்தை செல்வியின் கைக்குப் போட்டு விட்டு தனது வேலையை கவனிக்கச் சென்றாள். ஆனால் செல்வியின் மனம் ஆறுதல் அடைந்தபாடில்லை.

கதிரவனின் ஒளி மலையில் விழுந்து இயற்கை அன்னையை மேலும் அழகுபடுத்திக் கொண்டு இருக்கும் அந்த அழகை வேலையில்லாத நேரங்களில் செல்வி சாளரத்தினூடாகக் கண்டு ரசிப்பாள். ஆனால் இன்று அவளுடைய மனம் அவ் அழகை ரசிக்கும் நிலையில் இல்லை. அவளுக்கு அனைத்தும் வெறுமையாகவே தெரிந்தது. அவளுக்கு தனது சிறிய குடிசையையும், அருகில் உள்ள கடற்கரையும், தந்தை, தாயும், சகோதரிகளும் ஞாபகத்துக்கு வந்தார்கள். அவளுக்கு அவர்களை காணவேணும் போல் ஆவலாக இருந்தது. ஆனால் என்ன செய்ய அவள் வீட்டுக்குச் சென்றாள் அவளுடைய பெற்றோரையும், தங்கையையும் பார்த்துக்கொள்வது.

செல்வி இவ்வளவு நாளும் சம்பளம் என்று சொல்லி அவள் ஒரு ரூபாய் கூட வாங்கியதில்லை. "அம்மா நீங்க என்ட சம்பளத்தை அப்படியே அம்மாவுக்கு அனுப்பி விடுங்க, பாவம் அம்மா தனியாக கஷ்டப்படுவார். பணத்தை அனுப்பி வைத்தால் அதில் அப்பாவின் வைத்திய செலவை கவனிப்பார். எனவே நீங்கள் அம்மாவுக்கே பணத்தை அனுப்பி விடுங்கள் அம்மா" என கூறுவாள். செல்வி ஒருநாள் கூட இவ்வளவு அழுதது கிடையாது ஆனால் இன்று.... வானம் மெல்ல மெல்ல இருள் அன்னையை போர்த்திக் கொண்டது. அனைவரும் சாப்பிட்டு விட்டு நித்திரை கொள்வதற்காக தங்களது அறைக்கச் சென்றார்கள். அப்பொழுது தான் பாத்திரங்களை கழுவுவதற்கு சமையல் அறைக்குள் சென்ற செல்வி தனது எஜமானி அம்மா பாலை ஊற்றி மேசையிலேயே மறந்து வைத்துவிட்டு சென்றிருப்பதைக் கண்டாள். அதை கொடுப்பதற்காக பாலை எடுத்துக்கொண்டு எஜமானி அம்மாவின் அறையே நோக்கிச் சென்றாள். மெதுவாகக் கதவை தட்டுவதற்கு கையைத் தூக்கினாள். அப்படியே கையை கீழே இறக்கினாள். பேரிடி ஒன்று தனது தலையிலே விழுந்தது போல் இருந்தது அவளுக்கு. தனது எஜமானி அம்மாவா இப்படியெல்லாம் பேசுவது? அவளால் நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"என்னங்க ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டம் என்று சும்மாவா சொன்னாங்க. நீங்க பாட்டுக்கு செல்வியைக் கண்டபடி திட்டிட்டீங்க. அதைக் கேட்டுட்டு வீட்டை விட்டு அவள் போயிருந்தா அவள மாதிரி ஒரு வேலைக்காரி உங்களால கொண்டு வந்து தர முடியுமா? வர்ற வேலைக்காரிக்கு மாதாமாதம் எட்டாயிரம் சம்பளம் கொடுப்பீங்களா? செல்வி தன்னுடைய சம்பளத்தை தன்னுடைய வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிவைக்க சொல்லிவிட்டு பேசாமல் இருந்து விடுவாள். ஆனால் நாங்க ஒருநாள் கூட அவள்ட சம்பளத்தில இருந்து ஒரு பைசா சரி அவள்ட வீட்டுக்கு அனுப்பி இருக்கோமா இல்லையே. அவள்ட சம்பள பணத்தில் தான் இந்தா இந்த சங்கிலி, காப்பு, மோதிரம் எல்லாம் வாங்கினோம். அவள் வீட்ட விட்டு போகக்கூடாது என்று தானே அவளுடைய அப்பா இரண்டு வருஷத்துக்கு முன்னாடி வருத்தம் வந்து இறந்தத கூட சொல்லாம மறைச்சோம். இப்போ அவங்கட அம்மாவும் தங்கைகளும் சாப்பாட்டுக்கு கூடி வழியில்லாம கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பதையும் சொல்லவில்லை. எனக்கும் செல்வியக் கண்டாலே பிடிக்காது. ஆனா நான் அவள அனுசரிச்சி போகல்லையா? நீங்க என்னன்டா ஒன்டுமே தெரியாம இருக்கிறிங்க இன்னும் ஒரு வருஷத்தில நாங்க அமெரிக்கா போய்விடுவோம். அதுவரைக்கும் இவள் சம்பளம் இல்லாத வேலைக்காரியா இருக்கட்டுமே. அதுக்குப் பிறகு இவள் எங்கட வீட்டில இருந்து களவெடுத்திட்டாள் என்று சொல்லி வீட்டை விட்டு விரட்டி விடுவோம்" என்றாள்.

"சுந்தரி நான் உன்னைய என்னவோ நினைச்சிருந்தேன் ஆனால் நீ இவ்வளவு புத்திசாலியாக நடந்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்கல தங்கம்" என்று செல்லம் கொஞ்சினார் முதலாளி. "சரி சரி காணும் இனியாச்சும் செல்வி விஷயத்தில கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்க அவளுக்கு நம்ம மேல சின்ன சந்தேகமும் வரக்கூடாது. என்ன புரிகிறதா?" என்றாள் சுந்தரி. "ஆமா எஜமானி அம்மா புரிகிறது" என்று கூறி சிரித்தார் சிவபாலன்.

இச்சம்பாஷணையைக் கேட்டவுடன் கையில் இருந்த பால் கோப்பை நழுவி விழ, வந்த அழுகையை அடக்கிக் கொண்டு சமையல் அறைக்குள் ஓடினாள் செல்வி. அப்பா, அம்மா என்று கதறிக் கதறி அழுதாள். அவளுக்கு முன் இறந்து போன தந்தையின் முகம் நிழலாடியது. "அப்பா என்னை விட்டு போய் விட்டீர்களா" என்று கதறி அழுதாள். "அம்மா என்னை மன்னித்து விடுங்கள் அம்மா" என்று தனக்குள்ளேயே அதட்டிக் கொண்டாள்.

அவள் அழுவதை நிறுத்தினாள். அவளுக்கு தனது எஜமானியிடம் ஆத்திரமாக வந்தது. அவள் எவ்வளவு நம்பிக்கையாக இருந்தாள். அனைத்தையும் குழி தோண்டி புதைத்து விட்டாள். ஏழையாகப் பிறந்தால் நாங்கள் என்ன அவர்களது கொத்தடிமைகளா?. அவர்களது தேவை முடிந்ததும் எனக்கு களவாளி என்ற பட்டம் சூட்டி விரட்டி விடுவார்களாமே அவளது உள்ளம் பதறியது. "அம்மா நான் வருகிறேன். அந்த சிறு ஓலைக்குடிசையிலேயே நாங்கள் சந்தோஷமாக இருப்போம்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு தனது ஆடைகளை எல்லாம் மடித்து வைத்தாள்.

கோழி கூவியது புதிய விடியலை நோக்கி செல்வியும் தனது புதிய பயணத்தை நோக்கி பெட்டியுடன் வீட்டை விட்டு சென்றாள்.

செல்வி. மா. சிந்துஜா
தரம் 11
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்

தோல்விகள் தொடர்ந்து வரினும் முயற்சிகளைக் கைவிட வேண்டாம்.
ஏனெனில் தோல்வியே வெற்றியின் ஏணிப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து மாமன்றம்



கிறிஸ்தவ ஒன்றியம்



சுகாதாரக் கழகம்



வாசிப்பறை செயற்பாட்டுக் குழு



தேசிய மட்ட ஒலிம்பியாட்
கணித, விஞ்ஞான புத்தாக்க குழு



பெண்கள் சாரணிய குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட உண்மைகள்

01. அவநம்பிக்கை என்பது அறிவு, திறன் இல்லாத ஒன்று.
02. பெண்ணின் மிகச்சிறந்த அணிகலன் பொறுமை.
03. அன்பில்லாதவன் ஒரு அசுரன்.
04. கீழ்ப்படியாதவன் ஒரு அரக்கன்.
05. அள்ளிக் கொட்டி கிளறிப் போடாதே.
06. முடியவில்லை என்றால் நீ முயற்சி செய்யவில்லை என்று அர்த்தம்.
07. அறிவில்லாத ஆர்வம் ஒளியில்லாத நெருப்பு போன்றது.
08. உன் சிரிப்பு முத்துப்போன்றது. அதை பன்றிகளிடம் காட்டாதே
09. முட்டாள் அறிவை இருளில் பெறுகின்றான். அறிவாளி ஞானிகளிடமிருந்து பெறுகிறான்.
10. தெரியாமல் இருப்பது எருமைக்கு சமம்.
11. உன் அழகைப் பற்றிக் கனவு காணாதே அது உன் கடமையைத் தடுக்கும்.
12. இயலாமை என்பது அறியாமை ஆகும்.
13. உன் சிரிப்பு பிறருக்கு நீ கொடுக்கும் புனிதமான பரிசு.
14. காயத்தைப் பார்க்காதே அதன் வேதனையைப் பார்.
15. கோபம் பிறரை விட உன்னையே அதிகம் பாதிக்கும்.
16. குறைவாக கதைப்பவன் அதிகமாய் சிந்திப்பான்.
17. நீ வாழ்க்கையில் பெறும் அரிய பரிசு கல்வி.
18. ஏழை என்பது சாபமல்ல. அது உனக்கு சாதிப்பதற்கு கடவுளால் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம்.
19. ஒருவன் மீன் திண்ண ஆசையென்றால் மீனைக் கொடுக்காதே தூண்டில் போட கற்றுக்கொடு.
20. ஏழை என்பவன் கோழை அல்ல.
21. நாவுக்கு எலும்பு இல்லை. ஆனால் அது உன் எலும்புகளை நொறுக்கிவிடும்.
22. உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியவை. மிதிக்கப்பட வேண்டியவை அல்ல.
23. சிரி...! உன்னோடு உலகமே சிரிக்கும் அழு நீ மட்டும் அழுவாய்.
24. தீமையில் இருந்து தான் திறமைகள் பிறக்கும்.
25. இருட்டினில் தான் வெளிச்சம் பிறக்கும்.
26. மானம் என்பது உடலுக்கல்ல உயிருக்கு.
27. வெற்றியை விட அநேகமான தோல்வியில் இருந்தே அறிவை பெற முடியும்.
28. நலமான உடல் ஆன்மாவின் கோயில், நலிவான உடல் ஆன்மாவின் சிறைச்சாலை.

செல்வன். சோ. ஐயந்தரன்
தரம் 13
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்.

| | | |
|---|---|---|
| 01. இரத்தச் சுற்றோட்டம் | - | வில்லியம் ஹார்வே |
| 02. புற்றுநோய் | - | றொபேட் வெயினபரி |
| 03. மயக்க மருந்து | - | ஜேம்ஸ் சிம்சன் |
| 04. கருத்தடை மாத்திரை | - | பின்கஸ் |
| 05. இருதய மின் அலைப்படம் | - | என்தோவன் |
| 06. இன்பெருக்க சிகிச்சை | - | மார்ட்டீன் கிலியூ |
| 07. நீரழிவு நோய் | - | பேண்டிக் கெசட் |
| 08. போலியோ முக்கூட்டு வக்சீன் | - | அல்பேட்ஸ் சேபீன் |
| 09. உடற் சுற்றியல் | - | அல்பரசர் வானாலர் |
| 10. மனோதத்துவ ஆராய்ச்சி | - | சிக்மன் பிராய்ட் |
| 11. புகைப்பட சிகிச்சை | - | என். ஆர். பின்சன் |
| 12. வெறிநாய்க்கடி சிகிசிசை | - | லூயி பாஸ்டர் |
| 13. பாலுணர்வு சுரப்பிகள் | - | யூஜென்ஸ் டினாச் |
| 14. இரத்தம் உறைதல் | - | பால் எர்ல்ச் |
| 15. ஸ்ரேதஸ் கோப் | - | ரேனே லானக் |
| 16. அம்மை குத்தும் முறை | - | எட்வேட் ஜென்னர் |
| 17. கொலரா கசநோய் கிருமி | - | பொபேர்ட்கோச |

செல்வி. கு. விஜிதா
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்

# வாழ்வில் முன்னேற வைர வரிகள்

- முடியும் என்பது தன்நம்பிக்கை, முடியாது என்பது மூடத்தனம், முடியுமா என்பது அவநம்பிக்கை.
- நம்பிக்கை என்பது விழித்துள்ள மனிதனின் கனவு.
- சிந்தனையற்ற செயல் குருட்டுத்தனமானது. செயலற்ற சிந்தனை வெறுமையானது.
- கவலைப்படுவது காலத்தை வீணடிக்கிறது. நம்பிக்கையே நன்மையை தருகிறது.
- வாய்ப்புத் தானாக வருவதில்லை. மனிதனே அதை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.
- மதங்கள் இறைவனை அடைவதற்கான வழிகள் மட்டுமே.
- சூடான சிந்தனையை விட இதமான அன்பே இன்றைய தேவை.
- எதனைப் பேசுகிறோம் என்பதை விட எதைப் பேசக் கூடாது என்பதில் கருத்தாயிரு.

J. Riyana
Grade - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவங்களே வாழ்க்கை

வாழ்க்கையில் இரண்டு வகை படிப்பு உண்டு. ஒன்று பாடசாலைக் கல்வி. மற்றையது வாழ்க்கைக் கல்வி. பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு வாழ்க்கையைத் தொடங்குகின்றோம். வாழ்விலே பல்வேறு அனுபவங்கள், சோதனைகள், சங்கடங்கள், சிக்கல்கள். "ஆள் தப்பினால் போதும்" என்று எதிர்நீச்சல் போடுகின்றோம். கரைசேர்ந்த பின் "அப்பாடா!" என்ற ஒரு மூச்சு ஊடே ஒரு சிந்தனை.

ஏன் இந்த சங்கடங்கள்? ஏன் நமக்கு புத்தி இல்லாமற் போய் விட்டது? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கின்றோம். அப்போது "மீண்டும் வாழ்ந்தோம்" என்று மாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியைப் போல நமது சிந்தனை ஓடுகிறது. சரியாக வாழ்வதற்கு நம்மை நாம் சரியாக சரிபடுத்திக் கொண்டோமா? வாழ்வுக்கு முறையானமுன் பயிற்சி எடுத்துக் கொண்டோமா?

எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் இருக்கிறதே அது வாழ்விற்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் குணம். அதைக்கூட நாம் இயல்பாக மாற்றி விடலாம். ஆனால் இன்று நம்முடைய நாட்டின் கல்வி எவ்வாறு இருக்கிறது? "இதை தெரிந்து கொள்" என்று விஷயங்களையும் சொல்லித் தருகிற கல்வியாக இருக்கிறதே தவிர, குணங்களை வளர்க்கும் கல்வியாக இல்லை.

நீங்கள் " நல்ல குணங்களை கல்வி மூலம் கற்றுக்கொள்ள முடியுமா? நாம் மாற்ற முடியுமா? கேட்டபோது நிச்சயமாக முடியும். வாழ்வில் வெற்றி காணும் மனோ பாவத்தையும் எதையும் சமாளிக்கும் இயல்பைப் பயிற்சி மூலம் பெற முடியும். திரும்பத் திரும்பச் சொல்வது மந்திரம் ஆகிறது. இதை திரும்பத் திரும்பச் செய்வதன் மூலம் ஒரு காரியத்தைச் செய்வது நமது இயல்பாகிறது. நமது பள்ளிகளில் விஷயங்களைச் சொல்லித் தருகிறார்களே தவிர பயிற்சி தருவதில்லை. நமது பாடங்களை ஞாபகப்படுத்தி வைப்பதற்கே பரீட்சை வைத்து அதற்கு மதிப்பெண் போட்டுத் தருகிறார்களே தவிர வாழ்க்கைச் சம்பவங்களைத் தீர்மானித்து அதில் அவன் எப்படி நடந்து கொள்கிறான் என்று மதிப்பெண் கொடுத்துத் தேர்வு செய்வதில்லை.

பயிற்சி என்றால் என்ன? விஷயங்களை நம்முடையதாக்கிக் கொள்வது தான் பயிற்சி. நம்முடையதாக்கிக் கொள்ள அந்த விஷயங்களைத் திரும்ப திரும்பசெய்யப்பட வேண்டும். இப்படிப்பட்ட செயல்கள் மூலம் தான் இரசாயனமும், பௌதீகமும் மற்றைய எல்லா விஞ்ஞானபாடங்களும் போதிக்கப்படுகின்றன. நாமே கைப்பட செய்து கண்ணெதிரே அதன் விளைவைப் பார்க்கும் போது, அனுபவிக்கும் போது அது நம்முடன் தங்கி விடுகிறது. விஞ்ஞானத்தில் இருக்கும் இத்தகைய பயிற்சிகள் சரித்திர பாடத்திலோ, பொருளாதார பாடத்திலோ, சமூகவியல் பாடத்திலோ, இலக்கிய பாடத்திலோ அதிகம் கொடுக்கப்படுவதில்லை. இதன் குறையை இன்றைய கல்வி அனுபவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்வி முறையில் "விஷயங்களைத் தெரிந்து கொண்டவர்கள்" உருவாகியுள்ளார்களே தவிர விஷயங்களைக் கண்டு கடைபிடிப்பவர்கள் உருவாவதில்லை. அடிப்படை அனுபவக் கல்வியை இப்போது போதிப்பதில்லை. ஓட்டப்பந்தயத்தில் வெற்றி கொள்ள ஓட்டப்பயிற்சி எடுக்கிறோம். கண்களுக்குப் பயிற்சி கொடுக்க சூரிய நமஸ்காரம் செய்கிறோம். பாடுவதற்குக் கற்றுக்கொள்ள எவ்வளவு ஆண்டுகள் சாதகம் செய்கிறோம் என எண்ணிப்பாருங்கள்.

பாட்டுக்கற்றுக் கொள்பவர் ராகங்களைக் கையாளும் பாவம் போல நாம் மனப்பயிற்சி மூலம் நமது வாழ்க்கைப் பிரச்சினைகளை இலகுவாகவும், நளினமாகவும் கற்றுக் கொள்ளலாம். இதற்குப் பயிற்சி தான் தேவை. மனப்பயிற்சி போல உதவுவது வேறு எதுவுமே இல்லை. பள்ளியை மட்டுமே நம்பியிராமல் வாழ்க்கைக் கல்வியை நாமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை கல்வி என்பது நம்மைத் தயார் செய்யும் உகை ஞானம் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

**செல்வி. ஜெ. ஜெயகௌரி**
**தரம் – 13**
**தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்**

# தாய்மை

இவ் உலகில் எத்தனை
உறவுகள் இருந்தாலும்
என் தாயின் அன்புக்கு ஈடாகுமா
பத்து மாதம் என்னை சுமந்தவளே
பத்தியம் இருந்து
என்னை பெற்றெடுத்தாயே
உன் பாசத்திற்கு விலை
என்பது கிடையாது
உன் இரத்தத்தை
பாலாக்கி என் பசியாற்றினாயே
உன் பாசத்திற்கு
அணை கட்ட முடியாது
என் தாயின் பாசம் உயர்ந்த
வானத்தையும் மிஞ்சியது
அம்மா! அம்மா!
உன் உயர்வான அன்பு
பாசம் என்று என்னை
வாழவைக்கும்.

**செல்வி. M. பாத்திமா றினோசா**
**தரம் 03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கு வழி

நாளைய நாயகன் நீயாக
நாடு உந்தன் பெயர் சொல்ல
நன்மைகள் பல உன் சூழல் பெற
முயற்சியே உந்தன் வெற்றிக்கு வழி.

காலம் பல தான் கடந்தாலும்
காலம் உனை காவு கொண்டாலும்
கார்மேகம் பொழியும் மழை உன் புகழுரைக்க
தன்னம்பிக்கையே உந்தன் வெற்றிக்கு வழி.

எதிரிகள் உன்னைத் தடுத்தாலும்
உலகம் உன்னைத் தடுத்தாலும்
மீண்டும் குதிரையாய் பாய்ந்தோட
தைரியமே உந்தன் வெற்றிக்கு வழி.

ஏணிப்படியாய் முயற்சி கொள்
தன்னம்பிக்கை உந்தன் முதுகெலும்பாய்க் கொள்
தைரியம் உந்தன் கரமாய் கொள்
மூன்றும் உந்தன் வெற்றிக்கு வழி.

செல்வி. ஜெ. ஜெயகௌரி
தரம் – 13

## கல்வி

தேடிப் பெறவேண்டிய சித்து
தேடி வைத்துப் பார்க்கும் போது முத்து.
கோடி இன்பம் தந்துவிடும் வித்து
அதுவே கல்வி எனும் பொதுச்சொத்து

புத்தகத்திலிருக்கும் போது எழுத்து
தத்துவமாய் வாய் சொல்லும் போது கருத்து
அதைப் பயன்படுத்துவது உன்னைப் பொறுத்து
கல்வியே உண்மைச் செல்வமென உள்மனதில் நிறுத்து.

கல்வியை எதிர்ப்பவரை வருத்து
ஆசானைப் பேசாதே மறுத்து
அதை இன்னும் நீ வலியுறுத்து
நாளை உன் பெயர் பொன் எழுத்து.

கல்வி என்பது மூன்றெழுத்து
இளமைக் கல்வியோ சிலை எழுத்து
கல்வியில் உன்னை முழுமையாக ஈடுபடுத்து
அதனால் நீ பெறுவாய் உயர்மதிப்பு

செல்வி. சுமுது ஹன்சனி
தரம் – 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பள்ளி [சிறுகதை]

எங்கும் பச்சைப் பசேல் என காட்சியளிக்கும் அந்த அத்தினாபுரத்தின் மகுடமாக காட்சியளிப்பது அத்தினாபுர வித்தியாலயமாகும். சில ஆண்டுகளுக்கு முன் சிறந்த பாடசாலை என பெயர் பெற்ற அப்பாடசாலை தற்போது சிலகாரணங்களினால் கல்வியில் மிகவும் பின் தங்கியே காணப்படுகின்றது.

அப்பாடசாலையில் சுமார் பத்து வருடங்களுக்கு முன் கல்வி கற்ற ரம்யா எனும் மாணவி, தனது கல்லூரிப்படிப்பை முடித்து அப்பாடசாலைக்கே ஆசிரியராக பணி நியமனம் பெற்றார். தான் கற்ற பாடசாலையின் நிலை கண்டு மிகவும் வருந்தினாள் ரம்யா. தான் ஏதாவது செய்ய வேண்டும் என மனம் துடித்தாள்.

அப்பாடசாலையின் குறைகளை முதலில் அறிந்து கொண்டாள். மாணவர்களைப் பற்றி தகவல்களை திரட்டினாள். மாணவர்கள் ஒழுங்கீனமான வரவைக் கொண்டிருப்பதன் காரணம் அறிந்தாள். மாணவர்களுடன் சுமுகமான உறவை வளர்த்தாள்.

ரம்யா தரம் பதினொன்றுக்கான வகுப்பாசிரியராக பொறுப்பேற்றாள். அந்த வருடத்தில் மிகச்சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொடுப்பதாக அதிபரிடம் உறுதி பூண்டாள். தான் கூறிய உறுதி மொழியை நிறைவேற்றுவதற்காக பாடசாலையில் மட்டுமன்றியும் பாடசாலை முடிவுற்றதும் மாணவர்களை தனது வீட்டிற்கு அழைத்தும் பாடம் கற்பிக்கலானாள். ரம்யா கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களை மிகவும் சிரத்தையுடன் கவனமாகவும் நேரகாலமின்றி மாணவர்களுக்கு கற்பித்தார். மாணவர்களும் தமது ஆசிரியர் பற்றி அறிந்து ஒழுங்கான வரவைக் கொண்டு ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை மிகவும் அவதானத்துடன் கற்று சித்தியடைந்தார்கள். ரம்யாவும் மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். மீண்டும் அத்தினாபுர வித்தியாலயம் மகுடம் சூடிக்கொண்டது.

செல்வி. K. தர்மிகா
தரம் 13 கலைப்பிரிவு

◊ பிறரிடம் தாட்சசண்யம் காட்டு. உன்னிடம் மட்டும் தாட்சசண்யம் காட்டாதே.

◊ அடிக்கிற காற்று பலமாக அடித்தால் குப்பை கூட கோபுரத்துக்குப் போய்விடும்.

◊ வேடிக்கைப் பார்ப்பவனுக்கு வேதாந்தம் தான் பேசத் தெரியும். பாதிக்கப்பட்டவரின் வேதனை தெரியாது.

◊ படித்தவர்களை மதிக்காதச் சமூகம் கெட்டு செயலிழந்து நாசமாகிப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைத்திறன் உறுதிமொழிகள்

* நான் இனிமையான, தூய்மை மிக்க கவர்ச்சிகரமான, மகிழ்ச்சிதரும் சேவைச் சூழலை உருவாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.
* எனது அலுவலகத்தில் நான் நாளாந்தம் காலையில் இனிமையாக எல்லோரையும் வாழ்த்தி வரவேற்று இன்மகிழ்நலச் சேவைச் சூழலை உருவாக்குவேன்.
* நான் எப்பொழுதும் தயாளசிந்தையும் இனிமையும் மகிழ்வும் மகிழ்ச்சியும் உடையவனாக வாழ்கின்றேன். அழகான அலுவலகத்திற்கு இவை அழகூட்டும்.
* நான் என் வாழ்நாளில் சுத்தத்தையும், தூய்மையையும் என்றென்றும் போற்றிப் பேணுவேன். எனது திறனுக்கும், திறமைக்கும் அவை அடிப்படை.
* நான் வேண்டியவற்றையும் வேண்டாதவற்றையும் வெவ்வேறாக வகுப்பேன். வேண்டியவற்றை அருகிலும் வேண்டாதவற்றை தொலைவிலும் வைத்திருப்பேன்.
* நான் எல்லாப் பொருட்களுக்கும் குறித்தொரு இடம் ஒதுக்கி அவற்றை அவ்விடத்தையே பேணி வருவேன். எடுத்த பொருட்களை எடுத்த இடத்திலேயே வைத்துவிடுவேன். சீரான ஒழுங்கமைப்பு, சிறப்பான வடிவமைப்பு சிறந்த சேவைக்கு வித்திடும்.
* நான் எப்பொழுதும் எனது மேசையில் மிக முக்கியமான, அன்று அவசியமான தேவையான கோவைகளை மட்டும் ஒழுங்குபடுத்தி அவற்றைச் சிறந்த பணி ஒழுங்கில் பேணிவருவேன். அழகான மேசை. அழகான சேவை.
* நான் அவசரமானதும், அவசியமானதும் தவிர்ந்த ஏனைய கோவைகளை எனது மேசையில் தேக்க அனுமதிக்கமாட்டேன்.
* நான் தினம் தினம் சிறந்த சேவைச் சூழலை உருவாக்கி, என்னையும் ஏனையோரையும் மகிழ்விப்பேன்.
* நான் சுற்றிலும் விடயதானங்களைச் சிதறவிடமாட்டேன். "அழகே மகிழ்ச்சி சுத்தமே சுகம் தரும்" என்பதே என் கொள்கை.
* நான் அவசர - அவசிய ஒழுங்கில் என் பணிகளை மேற்கொள்ளுவேன்.
* நான் என் பணியில் சீரும் சிறப்பும் வினைத்திறனும் உடையவன்.
* நான் தினம் தினம் விடயச் சீராக்கங்களில் ஈடுபடுவேன். ஏனையோரையும் இப்பணிகளில் ஈடுபடத் தூண்டுவேன்.
* எனது மேசையும் அலுவலகமும் சிறப்பாக அழகாக எப்பொழுதும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். அவை எமக்கு மகிழ்வையும் மகிழ்ச்சியையும் நல்கிடும். எமது சேவைத்திறன் மென்மேலும் மேம்படும்.
* நான் அழிக்கப்பட்ட விடயங்களை மீள எழுதிவிடுவேன்.
* நான் வீழ்ச்சியுற்ற விடயங்களை மீண்டும் அவ்விடத்திலேயே பொருத்திவிடுவேன்.
* நான் நீக்கப்படவேண்டிய கோவைகளைப் பொருட்களை அப்புறப்படுத்திவிடுவேன்.
* நான் ஐம்பெரும் பணிக்கொள்ளையினை சிறப்பாகக் கடைப்பிடிப்பேன்.
* என் பணிகளை ஒரு முன் உதாரணமாகத் திகழும் வகையில் பேணுவேன்.
* அழகான, அமைதியான, காற்று ஓட்டமுடைய, சுகாதாரம் மிக்க ஆரோக்கியமான பணிச்சூழல் எமக்கு உடல் நலத்தையும் மனநலத்தையும், தேக ரோக்கியத்தையும் வாரி வாரி வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைக்கீழ் நீர் மாசடைதல் (Ground water Pollution)

புவியில் காணப்படும் வளங்களில் பெறுமதிமிக்க ஒன்றாக நீர்வளம் காணப்படுகின்றது. நீர் ஒரு வரையறுக்கப்பட்ட வளமாகவும் விலைமதிக்கமுடியாத ஒரு வளமாகவும் காணப்படுகின்றது. நீரின் பரம்பலுக்கேற்ப அதனை மேற்பரப்பு நீர், தரைகீழ் நீர் என வகைப்படுத்தலாம். ஆறு, குளம். ஏரி, சமுத்திரம் போன்றவற்றில் உள்ள நீர் மேற்பரப்பு நீர் எனவும் கிணறு, குழாய் கிணறு, ஆட்டீசியன் கிணறுகள், வெந்நீர் ஊற்றுக்கள் போன்றவற்றில் உள்ள நீர் தரைகீழ் நீர் எனவும் அழைக்கப்படுகிறது.

தரையின் மேல் விழும் மழை நீரானது மண்ணின் நுண் துளைகளினூடாக ஊடுவடிவதன் மூலம் தரை கீழ் நீராகத் தேங்குகிறது. நீரின் பயன்பாடானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 2025ல் 60% ஆன மக்கள் நீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவர் எனக் கூறப்படுகின்றது. தற்போதைய உலக சனத்தொகையில் 33% ஆனோர் தூய நீரைப் பெறமுடியாதுள்ளனர். இதன் விளைவாக ஒரு துளி நீரின் விலை ஒரு துளி பெற்றோலின் விலையை விடவும் கூடுதலான பெறுமதியைப் பெறக்கூடிய காலம் மிகவும் தொலைவில் இல்லை என ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் நீரியல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட சிரியாவின் பிரதிநிதியான 'ஜனாப் சவூப்கௌஸ்' கூறியுள்ளார். இத்தரைகீழ் நீரின் பங்கானது ஐரோப்பாவில் 75% ஆகவும் ஐக்கிய அமெரிக்காவில் 51% ஆகவும் ஆசியாவில் 32% ஆகவும் காணப்படுகின்றது. இலங்கையில் மீள்பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய தரைகீழ் நீரின் அளவு – 45000 மில்லியன் கன லீற்றராகவும், ஒரு வருடத்தில் நுகர்வுக்காக எடுக்கப்படும் தரைகீழ் நீரின் அளவு 11000 மில்லியன் கன லீற்றராகவும் காணப்படுகின்றது.

இவ்வாறாகப் பயன்படுத்தப்பட்டுவரும் தரைகீழ் நீரானது பல்வேறு மனித செயற்பாடுகளால் மாசடைந்து வருகின்றது. ஒரு தடவை தரைகீழ் நீர் மாசடைந்தால் அதனை மீண்டும் சுத்திகரிப்பது என்பது மிகவும் கடினமானதாகும். இத்தகைய தரைகீழ் நீரானது மாசடைவதற்கான காரணிகளை அடுத்து நோக்குவோம்.

**❋ விவசாய உற்பத்தி (Agricultural Products)**




கிருமிநாசினிகள், களைக்கொல்லிகள் போன்ற நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் மழைநீருடன் கலந்துதரைகீழ் நீர்மாசடைவிற்கு காரணமாகின்றது. இதற்கு உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, கனடா, போன்ற நாடுகளின் நிலக்கீழ்நீர் மாசடைவை குறிப்பிடலாம். அத்துடன் தவறுதலாக சிந்தப்பட்ட பீடை நாசினிகளால் ஏற்பட்ட நீர் மாசில் 10 – 20 பீடை நாசினிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் யாழ்குடா நாட்டில் உரம், கிருமிநாசினி பாவனையால் தரைகீழ் நீரிலே அதிகளவான நைத்திரேற்படிவுகள் காணப்படுவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி இங்கு 79% மான கிணற்று நீரிலே நைத்திரேற் அளவானது 200 அடி வரை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே நீலக்குழந்தை (Blue baby) பிறப்பிற்கு காரணமாகின்றது. இதைவிட விலங்குகளுக்கான உணவுக்குவியல்கள் (Animal feed lots) மற்றும் இயந்திரங்களாலும் தரைகீழ் நீர் மாசடைகின்றது.

### ❋ கழிவு நீர் சேரல் (Septic tanks)



நகர்ப்புறங்களில் மலக்குழிகளும், கழிவு நீர் குழிகளும், நீர் தரும் கிணறுகளுக்கு அருகில் அமைவதால் இக்குழிகளிருந்து படிப்படியாக கீழிறங்கும் கழிவு நீர், கிருமிகள் (பக்டீரியா) என்பன நீரை மாசடையச் செய்கின்றன. மாநகர விதிகளின்படி கிணற்றுக்கும் மலசல கூடத்திற்கும் இடையிலான தூரம் 30 அடியாக இருக்க வேண்டும். ஆனால் இன்று நிலம் துண்டாடப்படுவதால் இதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் மலசலகூடக் கழிவுகள் கிணற்று நீருடன் கலக்கின்றன. இதனை பருத்திதுறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் காணலாம்.

### ❋ நிலக்கீழ் சேமிப்பு தாங்கிகள் (Under Ground Storage tanks)

4 லீற்றர் பெற்றோல் ஆனது 50000 பேருக்கான தரைகீழ் நீரை மாசடையச் செய்து விடுகிறது. இப்படியான கசிவினையும் ஆபத்தையும் ஏற்படுத்தும். கழிவுகளைக் கொண்ட நிலக்கீழ் நீர் தேக்கத் தாங்கிகள் வட அமெரிக்காவிலே 1.4 மில்லியனுக்கு மேற்பட்டவை உண்டு. இவற்றில் கசிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### ❋ அளவுக்கதிகமாக தரைக்கீழ் நீர் பாவனைக்கு எடுக்கப்படல்.

தரைக்கீழ் நீரின் பாவனை அதிகரிக்கும் போது உவர்நீர் ஊடுருவி தரைக்கீழ் நீரின் தரம் குறைவடைகிறது. இதைவிட மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்படும் காலங்களில் தரைக்கீழ் நீர் மட்டம் கீழ் இறங்குவதன் காரணமாகவும் உவர்நீர் ஊடுருவுகின்றது. இதற்கு உதாரணமாக புத்தளம், கற்பிட்டி, மன்னார் பகுதிகளிலுள்ள கிணற்று நீரை குறிப்பிடலாம்.

### ❋ திண்மக்கழிவுகள் கலத்தல்

தொழிற்சாலை கழிவுகள் நிலத்தினுள் புதைக்கப்பட்டு வருவதனாலும், பல்வேறுவகையான தீங்குதரும் பொருட்களைக் கொண்ட திண்மக் கழிவுகள் நகரப்புறங்களில் குவிக்கப்பட்டு வருவதனாலும் மழை நீரானது அவற்றினூடாக கீழிறங்கும் போது தரைகீழ் நீரானது மாசடைகின்றது. அத்துடன் பல்வேறு வளங்களைப் பெறுவதற்காகவும், வேறு தேவைகளுக்காகவும் அகழப்படும் குழிகளை நிரப்பும் போது வடிகால் நீரோட்டங்களுக்கு ஏற்ப இவை நிரப்பட்டாலும் கழிவு நீர் முறையாக ஓடாமல் கீழ் இறங்கி நிலக்கீழ் நீரை மாசடையச் செய்கின்றது. உதாரணம் : சுரங்கமறுத்தல், சவக்காலைக்குழிகள், நகரக்கழிவு நீரோட்டம் போன்ற செயற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டவை தவிர இன்று தரைகீழ் நீரிலே புளோரைட் செறிவு உயர்வாகக் காணப்படலும் ஒரு பிரச்சனையாக உள்ளது. அனுராதபுரம், எப்பாவல போன்ற இடங்களிலுள்ள நிலக்கீழ் நீரிலே 1 லீற்றருக்கு 9mg எனும் அளவில் புளோரைட் காணப்படுகிறது. வடசீனாவில் 70 மில்லியன் மக்களும் வடமேற்கு இந்தியாவில் 30m மக்களும் பாவிக்கும் குடிநீரில் அதிக புளோரைட் கலந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இதுவே முதுகெலும்பு நோய்கள், கழுத்து, கால், பல் நோய்களுக்கு காரணமாக அமைகின்றது.

எனவே இவ்வாறு மாசடைந்து வரும் தரைக்கீழ் நீரானது தொடர்ந்து மாசுபடுத்தப்படுமானால் நீர்பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக உருவெடுக்கும் மாசடைந்த ஆறு ஒன்றினை 20 நாட்களின் பின்பு பாவனைக்கு உட்படுத்தலாம். ஆனால் மாசடைந்த தரைகீழ் நீரினை மீள் பாவனைக்கு உட்படுத்த 1400 வருடங்கள் செல்லும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனவே இவற்றைத் தடுப்பதற்கு சட்டங்களை இயற்றுவதுடன் அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது நம் எல்லோரதும் முக்கிய கடமையாக உள்ளது. ஏனெனில் மாசடைந்த நீரை அருந்துவதனால் நெருப்புக் காய்ச்சல்,

வயிற்றோட்டம், வாந்தி, கல்லீரல் வீக்கம், (ஹைப்பதீஸிஸ்) போன்ற நோய்களுக்கு ஆளாகுகின்றனர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள 1.5 மில்லியன் மக்களுக்கு பாதுகாப்பற்ற நீரே கிடைக்கின்றது. அந்நாடுகளிலுள்ள 80 சதவீத நோய்களுக்கும், வருடம் ஏறத்தாழ நான்கு மில்லியன் மக்கள் சாவிற்கும் இவ் அசுத்த நீரே காரணமாகின்றது. அத்துடன் அசுத்தநீர் பிரச்சனையால் இறப்பவர்களில் 90 சதவீதமானோர் 5 வயதிலும் குறைந்த சிறுவர்களாகும். எனவே இதனைத் தடுப்பதற்காக மக்கள் மத்தியில் நீர் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தல் அவசியம்.
உதாரணம் : கொதித்தாறிய நீரை பருகுவதற்கு அறிவுறுத்தல்.

மேலும் தொழிற்சாலைக் கழிவுகளை சரியான முறையில் அகற்றுதல் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தல், நகரப்பகுதிகளில் பாதாளச் சுரங்கம் அமைத்து மலக்கழிவுகளை சுத்திகரித்து அகற்ற நடவடிக்கை எடுத்தல், அரசாங்கம் பாதுகாப்பான குடிநீர் திட்டங்களுக்கு சட்டங்களை இயற்றல், பூச்சிநாசினிகள், இரசாயன வளமாக்கிகள் என்பவற்றின் உபயோகத்தை கட்டுப்படுத்தல், சேதன கூட்டுப் பசளையை உபயோகிக்க அறிவுறுத்தல் போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் நிலக்கீழ் நீர் மாசடைவைத் தடுக்கலாம். எனவே உலகை சமுகத்தினராகிய எமது பிரதான கடமை என்னவெனில் நீர்வளத்தைப் பேணிப்பாதுகாப்பதாகும்.
"எதிர்கால உலகின் பெறுமதிமிக்க இயற்கை வளம் நீர் ஆகும்"

"சுத்தம் சுகம்தரும் அசுத்தம் நோய் தரும்"
"நலமாய் வாழ நன்னீரை பாதுகாப்போம்"

**உசாத்துணை நூல்கள்**


1. சூழலியல் - அன்ரனி நோர்பேட்
2. மனிதனும் சூழலும் - மத்திய சூழல் அதிகாரசபை
3. சுற்றுச் சூழலியல் - கலாநிதி க.குணராசா
4. புவி அருவி - கிழக்கு பல்கலைக்கழகம்
5. பௌதீகப் புவியியல் - GIZ
6. இணையத்தகவல்கள் -



**திருமதி. ந.விஷ்ணுகுமார்**
**ஆசிரியை**
**தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கற்றலில் இடர்ப்படுவதற்கான காரணங்கள்

ஒரு குழந்தை தாயின் கருவறையில் இருக்கும் போதே கற்க ஆரம்பிக்கின்றது என்பது உளவியலாளர்களின் கூற்று. இக்கருத்து முற்றிலும் உண்மை. இவ்வாறு கருவில் கற்கத் தொடங்கும் குழந்தையானது இப்பூலோகத்தில் பிறந்து பாடசாலைக் கல்வியைத் தொடரும் போது கற்றற் செயற்பாடுகளில் இடர்படுவது ஏன்? இந்த வகையில் ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாவன உடல், உளத்தேவைகள், முறையான முன்பள்ளிக் கல்வி, பிள்ளையின் ஆர்வம், பெற்றோர்களின் பங்களிப்பு, பொருளாதார நிலை, சகபாடிகள், வகுப்பறைச் சூழல், ஊக்குவிப்புக்கள், மொழியாற்றல், பாடசாலை முறைமை என்பனவாகும்.

ஒரு பிள்ளை கற்றலில் இடர்ப்படுவதற்கான முதற்காரணி பிள்ளையிடம் உடல் உளத் தேவைகள் கிடைக்காமையாகும். இன்றைய எமது சமூகச்சூழலை நோக்கும் போது அதிகமான பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பிரிந்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். சில பிள்ளைகள் தாய் அல்லது தந்தையை அல்லது இருவரையும் இழந்து வாழ்கின்றனர். இப்படி வளரும் பிள்ளைகளுக்கு அன்பு, காப்பு, கனிப்பு என்பன கிடைக்காமல் போகின்றது. ஒரு பிள்ளையின் உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிக்கு இவை மிகவும் பிரதானமென உளவியல் விற்பனர்கள் வலியுறுத்தியுள்ளனர். (பியாஜே, மாஸ்லோ, தோமஸ்) பிள்ளைகளுக்கு இயல்பாக ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பெற்றோர் இன்மையால் அப்பிள்ளை இயல்பாகவே கற்றலில் பின் நிற்பதுடன் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடத் தொடங்குகிறது.

அடுத்த காரணியாக முறையான முன்பள்ளிக் கல்வி பிள்ளைக்கு வழங்கப்படாமையைக் குறிப்பிடலாம். ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன் பள்ளிக் கல்வி அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. முன்பள்ளிக்குச் சென்ற பிள்ளை தரம் ஒன்றில் சேரும் போது விருப்பத்துடனும் மிகுந்த ஆர்வத்துடனும் சேர்ந்து, எல்லோருடனும் பழகும் தன்மையும் எதையும் ஆராயும் இயல்பு, கற்றலில் ஆர்வமும், முன்வருதல் போன்ற சிறப்பான இயல்புகளைக் கொண்டிருக்கும். மாறாக முன்பள்ளிக்குச் செல்லாத பிள்ளையிடம் இப்பண்புகளை காணமுடியாது. இவ்வாறு முன்பள்ளி செல்லாத பிள்ளை, ஏனைய மாணவர்களுடன் சேர்வதும் அரிதாகவே இருப்பதுடன் ஒதுங்கி இருத்தல், கற்றலில் கவனம் இன்மை தொடர் அழுகை, போன்றன காணப்படும். ஒரு பிள்ளையின் சிறப்பான கற்றலுக்கு முன்பள்ளி அவசியம் எனக் கூறப்பட்டாலும், இன்றைய காலகட்டத்தில் சில முன்பள்ளிகளில் முறையற்ற கல்வி வழங்கப்படுகிறது. எழுத்துக்கள், சொற்கள் போன்றவற்றை எழுதக் கற்றுக் கொடுக்கின்றார்கள். இது பிள்ளைகளின் அளவுக்கும், ஆற்றலுக்கும் மீறிய செயலாகும். இவ்வாறான முறையற்ற கல்வியாலும் மாணவர்கள் கற்றலின் போது இடர்ப்படுகின்றனர்.

அடுத்து பிள்ளையின் ஆர்வமும் கற்றலில் அதிக செல்வாக்குச் செலுத்துகிறது. இவ்விடயத்தில் தனியே பிள்ளை மட்டுமன்றி பல புறக்காரணிகளும் அடங்குகிறது. சில பிள்ளைகளிடம் இயல்பாகவே ஆர்வம் இன்மை இருப்பினும் அதனை அகற்றி மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்துவது ஆசிரியர், மற்றும் பெற்றோர்களின் கடப்பாடு எனலாம். கல்வி கற்றால் முன்னேறலாம், உயர் அந்தஸ்தைப் பெற்று நல்லவர்களாக வாழலாம் என்ற கருத்துக்களை அந்தச் சின்னஞ்சிறிய உள்ளங்களில் விதைக்க வேண்டும். அது நிச்சயம் முளைத்து பெரிய விருட்சமாக வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பிள்ளைகளின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி பெற்றோர்களின் பங்களிப்பாகும். கல்வியறிவு குறைந்த பெற்றோரின் பிள்ளைகளும் கற்றலில் பின்நிற்கின்றனர். கிராமப்புறங்களிலும் ஒரு சில பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதால் அவர்களும் தங்களது பிள்ளைகளின் கல்வியில் கரிசனை காட்டுவது குறைவு. சீசன் தொழில் ஆரம்பித்தால் பிள்ளை பாடசாலை வராது. அத்துடன் அருகிலுள்ள கோயில் திருவிழா நிகழ்வென்றால் மாணவர்களை கோயிலில் தான் காணமுடியும் " ஆலயம் தொழுவது சாலவும் நன்று" ஆலயம் செல்ல வேண்டும் ஆனால் பாடசாலை நேரங்களில் அல்ல என்பதே பிள்ளைகளுக்கு பெற்றோர் வழிகாட்ட வேண்டும்.

மேலும் பெற்றோரின் பங்களிப்பு என்ற வகையில் அவர்களின் வறுமை நிலையும் கற்றலுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கத் தடையாகியுள்ளது. பரீட்சைக்கட்டணம், பாடசாலைக் கலைவிழாக்கள் முதலியவற்றுக்கு பணம் கேட்கும் போது வறிய பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதில்லை. வறிய பிள்ளைகளிடம் போஷாக்கின்மையும் காணப்படுகின்றது. இதன் காரணமாக அப்பிள்ளைகள் அடிக்கடி நோய்ப்வாய்ப்படுவதுண்டு. இக்காரணிகளால் பாடசாலைகளில் மாணவரின் வரவு குறைவடைகிறது. தொடர்ந்து பாடசாலைக்கு சமூகம் தராத பிள்ளைக்கு வகுப்பறையில் கற்பிக்கும் பாடங்கள் விளங்குவதில்லை. இதனால் இவர்களின் கற்றலில் மந்த நிலை ஏற்படுகின்றது. தொடர்ந்து இவர்கள் கற்றலில் இடர்ப்படுபவர்களாகவே இருப்பார்கள்.

ஒரு குழந்தையின் சீரான கற்றலில் வகுப்பறைச் சூழலும் முக்கிய பங்காற்றுகிறது. ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்பித்தல் என்ற அடிப்படையில் ஆடல், பாடல், கதை கூறல், நாடகம் நடித்தல், விளையாட்டுச் செயற்பாடுகள், போலச் செய்தல் அபிநயம் செய்தல், நகைச்சுவை நிகழ்வுகள் கூறல், போட்டிகள், குழுச்செயற்பாடுகள், என்பன மூலம் அவர்கள் விரும்பும் பாணியில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் சில ஆசிரியர்கள் மாணவர் மையமாக அல்லாமல் தமது பாணிகளில் (உத்திகளில்) மாற்றமின்றி மாணவர் வெறுப்படையும் விதத்தில் கற்பிப்பதும் மாணவரின் கற்றலில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகிறது.

ஊக்குவிப்புக்களும், பாராட்டுக்களும், பிள்ளையின் சீரான கற்றலுக்கு ஏதுவாக அமைகின்றன. மீத்திறன் கூடிய மாணவர்கள் கற்றலிலும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்தைக் காட்டும் பொழுது அதிபர், ஆசிரியர், பெற்றோர்களின் பாராட்டுக்களைப் பெறுகின்றனர். இவ்வாறு ஊக்குவிப்புக்களைப் பெறும் மாணவர்கள் தொடர்ந்து கற்றலில் ஈடுபடுகின்றனர். ஆனால் மீத்திறன் குறைந்த மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பரிசில்களோ, பாராட்டுக்களோ கிடைப்பது குறைவு. இதன் காரணமாக இம் மாணவர்கள் தனித்து ஒதுங்கிப் பின்னடைவதுடன் கற்றலிலும் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

மற்றுமொரு காரணத்தையும் நோக்குவோமானால், கற்றல் ஊடகம் மொழியாதலால் பிள்ளையின் தொடர்ச்சியான கற்றலுக்கு அடிப்படை மொழியாற்றல்கள் மிகமிக அவசியமாகின்றன. ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு மொழித்திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்க வேண்டும். மாணவர்களின் செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் முதலிய மொழித்திறன் வளர்ச்சிக்கு சிறந்த பொருத்தமான பயிற்சிகளை ஆசிரியர் மட்டும் கொடுத்தால் போதாது. பிள்ளையின் வீட்டுச் சூழலும் இதற்கு உதவ வேண்டும். உதாரணம் : ஆக்கபூர்வமான பொழுது போக்குகளில் பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு செயற்படுத்தினால் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலக் கல்வி சீரான வளர்ச்சியினைப் பெறும். இவ்வாறு சிறந்த வழிகாட்டல் பயிற்சிகளைப் பெறாதபிள்ளை கற்றலில் பின் நிற்பதுடன் இடைவிலகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

ஒரு பிள்ளையை சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜையாக வழிப்படுத்துவதற்கு பெற்றோரதும், ஆசிரியர்களினதும் பங்களிப்பு அத்தியாவசியமாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" இளமைப் பருவமே கல்வி கற்பதற்கு சிறந்த பருவம் ஆதலால் மாணவர்களுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறி கல்வியில் நாட்டத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும் பிள்ளையின் உடல், உளத் தேவைகள், குடும்பச் சூழல் போன்றவற்றை இனம் கண்டு இயலுமான வரை பூர்த்தி செய்ய வேண்டும். வகுப்பறையில் எந்த நடிபாகம் பொருத்தமாக அமையுமோ சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் மாறியே ஆகவேண்டும்.

மாணவர்களுக்கு கற்பிப்பது வேப்பங்காய் போல் கசக்காமல், முழு நெல்லி சாப்பிட்டதன் பின்பு இனித்துச் சுவைப்பது போல் அமைய வேண்டும். மாணவர்களின் ஆற்றல்களுக்கு ஏற்ப அவர்களைக் கவர்ந்து விடயத்தைப் பெறும் வகையில் கற்பித்தல் துணைச் சாதனங்களை பயன்படுத்தி கற்பித்தல் வேண்டும்.

மேலும் வகுப்பறையையும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும் பார்த்தவுடன் மாணவர்களின் மனதில் "நான் படிக்க வேண்டும்" என்ற உணர்வு ஏற்பட வேண்டும். மெல்லக்கற்கும் மாணவர்களையும் அவர்களின் ஆற்றலுக்கு ஏற்ப பயிற்சிகளை வழங்கி அதில் அவர்கள் தேர்ச்சி பெற வழிகாட்டி பரிசில்களையும், பாராட்டுகளையும் வழங்க வேண்டும். மேலும் கற்றல், கற்பித்தல் நிகழும் வகுப்பறை அழகாகவும், மாணவர்களுக்கு பொருத்தப்பாடாகவும் வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ளதாக மாற்றி அமைத்து மாணவர்களைக் கவர வேண்டும்.

மேற்படிச் செயற்பாடுகளின் மூலமும், ஆசிரியர் அனைத்து மாணவர்களினதும் சீரான கற்றலுக்கு வழி கோல முடியும். இதற்கு ஆசிரியர்கள் தம்மை முழுமனதுடன் அர்ப்பணிக்க வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் ஆசிரியர் பணி சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மாணவர்கள் கற்றலில் இடர்ப்படுவதற்குரிய புறக்காரணிகளை இனம் கண்டு கற்பதற்கு வழிகளை ஏற்படுத்துவது கட்டாய கடமையாகும். மேலும் ஒரு கட்டிடத்திற்கு அடித்தளம் எவ்வாறு உறுதியாக அமைய வேண்டுமோ அவ்வாறே ஒரு பிள்ளையின் ஆரம்பக்கல்வி உறுதியாக அமைய வேண்டும்.

எனவே இப்புலத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரும் எதிர்கால எம் மாணவச் செல்வங்களுக்கு நல்வழிகாட்டி நன்னெறி ஒழுகி வையத்துள் வாழ்வாங்கு வாழ துணை புரிய உறுதி பூணுவோம்.

" ஆசானை நேசி உன்
அறிவுக்கு அர்த்தம் உண்டாகும்"

"புத்தகத்தில் உலகத்தைப் படித்தால் அறிவு செழிக்கும்!
உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்!"

திரு.நாராயணசாமி ஜெயசீலன்
ஆசிரியர்
தி/ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

காலத்தால் அழியாத ஓவியங்கள்
கருத்தாலே கொள்ளாத காவியங்கள்
நினைத்தாலே நெஞ்சுருகும் தெய்வங்கள்
நினைவோமே ஆசான்கள் திருப்பாதங்கள்

தாம் கொண்ட மழலைகளின் நல்வழிக்காய்
தம்மையே அர்ப்பணிக்கும் தண்ணளியார்
வான் கொண்ட புகழ் பரப்பும் வளதகையார்
தாம் கொண்ட பணியிலே செயலுடையார்

எண்ணெழுத்து எனப்படுமிருகங்களுடனே
எல்லா நல்லொழுக்கம் நல்ல பண்பை
இயல்பாகக் குழைத்தூட்டும் தன்மையினால்
என்றென்றும் அவர்தானே இறைவனார்

கல்வியென்னும் உலகிலே கன்னியராய்
கலந்துறவாடுகின்ற கடவுளராய்
புண்ணியமாம் பெருந்தொழிலைச் செய்கின்ற
பொறுப்பினராய் புகழினையே பெறுகின்றார்.

ஏணிப்படிகளுக்கே இலக்கணமாய் என்றென்றும்
ஏற்றம் பெறவைப்பதுமே இக்குலமே
ஏணியைத் தள்ளிவிட்டு இகழ்ந்துரைக்கும்
எள்ளியரும் இவ்வுலகில் இருக்கின்றாரே

அன்னை தந்தை நாம்கண்ட முதன்மைத் தெய்வம்
ஆசான் தான் அறிவுக்கண் திறக்கும் தெய்வம்
என்னதான் நாம் எடுத்து இயம்பினாலும்
இத்தெய்வத்திற்கீடான தெய்வமுண்டோ?

ச.இந்துசா
13 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |
| காகித வீடு | - | ஜப்பான் |
| சீனாவின் வாசல் | - | குவாங்கோ |
| உலகின் கூரை | - | திபெத் |
| மரகதத்தீவு | - | அயர்லாந்து |
| பவள தீவு | - | பவர்ரேன் |
| கிராம்பு தீவு | - | சான்சிபார் |
| நதி இல்லாத நாடு | - | டென்மார்க் |
| பொற்கோயில் நகரம் | - | இந்தியா |
| கம்பளியின் நாடு | - | அவுஸ்ரேலியா |
| ரொட்டி நாடு | - | ஸ்கொட்லாந்து |
| ஆசிய நோயாளி | - | மியன்மார் |
| இந்தியாவின் வாசல் | - | மும்பாய் துறைமுகம் |
| அமைதி நாடு | - | கொரியா |
| இந்து சமுத்திரத்தின் முத்து | - | இலங்கை |

Benla
Grade - 9

# பேனாவின் சுயசரிதை

எனது பெயர் அற்லஸ் பென். எனது பிறப்பிடம் இலங்கை, எனது மூதாதையர் இம் மண்ணுலகிற்கு வந்து பல ஆண்டுகள் ஆகின்றது. ஆனாலும் நான் இன்றுதான் எனது பணியை தொடர்கின்றேன். முதல் நாள் சானுஜன் என்ற கடையில் நான் மிகவும் அழகாகவும், என்னைக் காண்போரை கவர்ந்து இழுக்கக்கூடியவனாகவும் இருந்தேன். எனது நிறமோ பச்சை எனது மேனியோ "பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று இருந்தது" அதிலும் புல்லில் விழுந்து பனித்துளி போல் என் மேனியில் சிறு வெள்ளை நிற புள்ளிகள். அன்று ஓர் நாள் என்னருகில் பிருந்தன் என்ற ஒருவன் "சின்னச் சின்ன மணித்துளிகள் சேர்த்து வைப்போனோ" என்ற பாடல் பாடிக்கொண்டே மெல்ல மெல்ல விரைந்து வந்து கொண்டிருந்தான். இவ்வளவு நாட்களாக நான் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்தேன். அன்று நான் என்வாழ்வில் பெரும் புயல் ஒன்று என்னை நோக்கி வீசியது. பிருந்தன் என்பவன் என்னை விலை கொடுத்து வாங்கி விட்டான். அவனிடம் நான் சென்ற முதல் நாள் நான் மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தேன். அவ்வாறே சந்தோஷத்துடன் என் கடமையை நிமிடங்கள் கூட தவறாமல் அவனுக்கு செய்து வந்தேன். இவ்வாறே என் கடமை நாட்களில் காலங்கள் முன்நோக்கி சென்று கொண்டிருந்தது. நாட்களும் கடல் அலைபோல் புரண்டு ஓடின. என் வயது என்னை வாட்டியது. என் மூச்சு நின்று விட்டது. இதனால் என் வாழ்வின் இறுதி நாள் என் பணியைச் செய்ய சற்று தயங்கிக் கொண்டிருந்தேன். பிருந்தனுக்கு பொறுமையில்லாக் கோபம் ஏற்பட்டு விட்டது. என்னை கோபத்துடனே தூக்கி எறிந்து விட்டான். நான் அவனுக்கு ஆற்றிய பணிகள் அவனது வேலைக்குக் கொடுத்த அழகு எல்லாவற்றையும் மறந்து செத்த பாம்பு என என்னை நினைத்து தூக்கி விசிறி விட்டான். இதே போல் நான் பட்ட துயரங்கள் நீங்களும் படாமல் இருக்க இறைவனிடம் அடிபணியுங்கள் எனக் கூறி எனது வாழ்வின் இறுதிக் கட்டத்தை அடைகின்றேன்.

ஆக்கம் : இ. துவாரகன்
தரம் : 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவிற்கான அறிவுரைகள்

* தவறு செய்வது மனித இயல்பாகும் ஆனால் அது தவறு என்று தெரிந்தவுடன் திருத்திக் கொள்ள வேண்டும்.
* உனக்கு தெரியாததை. தெரியாது என்று ஒப்புக் கொள்வதற்கு பெயர்தான் அறிவு.
* ஒரு சிறிய இன்பத்தை துறப்பவன் மூலம் ஒரு பெரிய இன்பத்தை அடைய முடியுமென்றால் பெரியதற்காகச் சிறியதை விட்டுக் கொடுப்பவன் அறிவாளி.
* கருத்துக்கள் தோன்றிய இடத்தில் மீண்டும் இரு கருத்துக்கள் தோன்றும்படி செய்பவர்தான் ஆசிரியர்.
* மற்றவர்களுக்கு நீ கொடுக்க விரும்பாததை மற்றவர்களிடம் இருந்து நீ கேட்கக்கூடாது.
* சூழ்நிலை மனிதனின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டது. ஆனால் ஒழுக்கம் அவனுடைய ஆதிக்கத்தில் உள்ளது.
* நீ வாழ்க்கையை விரும்புகிறாயா? காலத்தை வீணாக்காதே ஏனெனில் வாழ்க்கையே அதனாலானது.
* முடிந்து விட்டது என்பதற்காக வாழ்விற்கு முற்றுப்புள்ளி இட்டு விடாதீர்கள் முற்றுப் புள்ளியில் இருந்துதான் அழகான கோலம் ஆரம்பமாகிறது.
* இலட்சியம் மட்டும் உயர்வானதாக இருந்தால் போதாது அதை அடையும் வழியும் உயர்வானதாக இருக்க வேண்டும்.
* தாமதங்களுக்கான காரணங்கள் எனக்கு வேண்டியதல்ல நான் விரும்புவதெல்லாம் செயல் நிறைவேற்றமே.
* முடியுமென்றால் முயற்சி செய் முடியாதென்றால் பயிற்சி செய்.
* சொற்கள் வெறும் நீர்க்குமிழிகள், ஆனால், செயல்கள் தங்கத்துளிகள்
* தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ, அங்குதான் ஒழுக்கம் ஆரம்பமாகிறது.
* உண்மை நிட்சயம் நன்மையைதான் உண்டாக்கும்
* நல்ல அறிவின்றி நல்ல ஒழுக்கம் உண்டாகாது.
* மரியாதையாக நடப்பதும் பேசுவதும் செலவில்லாத செல்வங்கள்.

**செல்வி. ர.பிரிஜ்ஜா**

◊ சுயநலமுள்ளதே தீய ஒழுக்கம், பொதுநலமுள்ளதே நல்லொழுக்கம்.
◊ கேட்பதையெல்லாம் நம்பாதே நம்பியதையெல்லாம் சொல்லாதே.
◊ உண்மை பேசி கெட்டவர்கள் எவருமில்லை. பொய் பேசி வாழ்ந்தவருமில்லை.
◊ தனக்காக வாழ்பவன் துரோகி, பிறருக்காக வாழ்பவன் தியாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

| | | |
|---|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | - | அதனை சந்தியுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்திப்பு | - | அதை ஏற்றுக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | - | அதை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | - | அதைத் தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கடமை | - | அதை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | - | அதனை விளையாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு வினோதம் | - | அதனைக் கண்டறியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பாடல் | - | அதனைப் பாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | - | அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு உறுதிமொழி | - | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு காதல் | - | அதனை அனுபவியுங்ள் |
| வாழ்க்கை ஒரு அழகு | - | அதனை ஆராதியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உணர்வு | - | அதனை உணர்ந்து கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | - | அதனை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு குழப்பம் | - | அதனை விடை காணுங்கள் |
| வாழ்க்கை ஒரு இலக்கு | - | அதனை எட்டிப் பிடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | - | அதனை முடித்து விடுங்கள். |

செல்வி. பு. அபிவதனி
தரம் – 12

## இலங்கைக்குரிய தீவுகளும் அதன் பரப்பளவும்

| | | |
|---|---|---|
| தலைமன்னார் | - | 127.68 Km |
| வேலணை | - | 63.46 Km |
| நெடுந்தீவு | - | 47.46 Km |
| புங்குடு தீவு | - | 27.46 Km |
| காரைத் தீவு | - | 22.79 Km |
| மண்டை தீவு | - | 8.81 Km |
| அனலை தீவு | - | 5.70 Km |
| நயினா தீவு | - | 4.66 Km |
| இரணை தீவு | - | 4.40 Km |
| பாலைத் தீவு | - | 2.07 Km |

## இலங்கையின் பிரதான நீர்வீழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| பம்பரகந்த | - | 224 m |
| துருது ஓயா | - | 189 m |
| தியலும | - | 171 m |
| லக்சபான | - | 115 m |
| ரக்ன எல்ல | - | 110.6 m |
| கிரிந்திஎல்ல | - | 106 m |
| எபர்டின் | - | 90 m |
| டெவோன் | - | 86 m |
| செயின்ட் கிளயார் | - | 73 m |
| துன்கிந்த | - | 57.3 m |

செல்வி. ந. தமிழினி
தரம் – 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியிட தொழில் நுட்பமும் பூகோள இடநிலை ஒழுங்கும்
# Geospatial Technology and Global Positioning System (GPS)

திரு. கிருபா இராஜரெத்தினம்
விரிவுரையாளர், புவியியற்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## அறிமுகம்

உலகம் தொழில்நுட்பத்தின் உச்சியைத் தொட்டு நிற்கின்ற இன்றைய நாளில் மனித செயற்பாடுகள் அனைத்திலும் அவற்றின் செல்வாக்கு இரண்டறக் கலந்துள்ளதை நாம் காணமுடியும். அதன் வரிசையில் டிஜிட்டல் தொழில் நுட்பம் தனித்துவமான ஒன்றாக பெருவளர்ச்சி கண்டிருப்பதைக் காணலாம். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக எமது பயன்பாட்டில் இருந்துவரும் பொருள் ஒன்று மிகக் குறுகிய காலத்துள் மிகப் பழமையான பொருளாக மாறுவதை குறிப்பிடலாம். இவற்றின் பின்னணியில் புவியியலின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டு புதிய வியூகத்தில் வளர்ந்து கொண்டு வரும் புவியிட தொழில் நுட்பம் டிஜிட்டல் தொழில் நுட்பங்களின் வரிசையில் அறிவியலிலும், ஆராச்சியிலும் தனித்துவம் வாய்ந்த ஒன்றாகத் திகழ்ந்து வருவதைக் காணலாம்.

## புவியிடத் தொழில் நுட்பம் (Geospatial Technology)

புவிசார் தகவல்களை டிஜிட்டல் தொழில் நுட்ப அணுகுமுறையில் சேகரித்து, சேமித்து, பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றை வினைத்திறன் மிக்கவகையில் செயற்படுத்துகின்ற ஒரு தொழில் நுட்பக் கட்டமைப்பாக புவியிடத் தொழில் நுட்பம் விளங்கி வருகின்றது. புவிநிலைப்படுத்தப்பட்ட தரவுகள் (Georeferenced data) அல்லது புவியியல் நிலையங்கள் (Geography Coordinates) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிநுட்பக் கூறுகளுக்கு ஊடாக செயற்படுகின்ற தகவல் தொழில்நுட்பமே புவியிட தொழில்நுட்பம் என்று கூறப்படுகின்றது. (Dasgupta, 2010) இதில் அடங்கியுள்ள தொழில் நுட்பக் கூறுகளானது மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. அவை,

1) புவியியல் தகவல் ஒழுங்கு (Geographic Information System (GIS)
2) தொலை உணர்வு (Remote Sensing (RS)
3) பூகோள இடைநிலை ஒழுங்கு (Global Positioning System (GPS) என்பனவாகும்.

இவை மூன்றையும் ஒருங்கிணைத்தே இன்று புவி மேற்பரப்பு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிகள் புவியியலில் மட்டுமன்றி உலகின் அனைத்து துறைகளிலும் நேர்த்தியாகவும், துல்லியமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புவியியல் தகவல் ஒழுங்கானது கணினி மயப்படுத்தப்பட்ட படமாக்கல் செயன்முறைக்கும், இடம்சார்ந்த (Spatial) பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தீர்க்கமான முடிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உள்ள மிகச் சக்திவாய்ந்த கருவியாகும். அதனை "புவிசார் தரவுகளை சேகரிக்கின்ற (Collection), சேமிக்கின்ற (Store), தேவைக்கேற்ப மாற்றங்களுக்கு உட்படுத்துகின்ற (Manipulation), தரவுகளை முகாமைத்துவத்துக்கு உட்படுத்தக்கூடிய (Data Management)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வு செய்கின்ற (Analyss), ஒழுங்குபடுத்துகின்ற (Display), வெளிப்படுத்துவதற்கூடாக (Output) தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய கணினிசார் கருவிகளின் தொகுப்பே (Set of tools) புவியியல் தகவல் ஒழுங்காகும்". என பொதுவாக வரையறை செய்யலாம். தொலை உயர்வு என்பது "புவி மேற்பரப்பின் மீதான தகவல்களை எந்தவிதமான தொட்டுணர்தல் இன்றிப் பெற்றுக் கொள்ளுகின்ற ஒரு உயர் தொழில் நுட்பமாகும்" (Anand and Rajeskumar, 2013). மனிதன் செயற்கையான செயன்முறைகளூடாக (Artificial Processes) புவி மேற்பரப்புத் தகவல்களை செய்மதிகளுக்கூடாக வான வெளியில் பல கிலோமீற்றர்கள் தொலைவிலிருந்து டிஜிட்டல் தொழில் நுட்ப அணுகுமுறையில் பெற்றுக் கொள்ளுகின்ற ஒரு செயற்பாடாகும்.

## பூகோள இடநிலை ஒழுங்கு (GPS)

பூகோள இடைநிலை ஒழுங்கு (GPS), கூட்டுச் செய்மதிகளின் துணையுடன் பூகோளத்தின் குறித்த ஓர் இடைநிலையை (Location) உணர்த்துகின்ற தொழில் நுட்பக் கட்டொழுங்காகும். பூகோள நிலையங்களையும். அதன் மீதான நகர்வுகளையும் பூமியின் எவ்விடத்திலும் எந்த நேரத்தில் அறியக்கூடிய வகையில் அமைந்த ஒரு தொழில் நுட்பக் கட்டமைப்பாகும். இன்று இத்தொழில் நுட்பம் சமூகத்தில் பல்வேறு மட்டங்களிலும் அவர்களுடைய பிரயோகங்களில் விரைவாக ஊடுருவியிருக்கின்ற ஒன்றாக உள்ளது. GPS ஒரு வகை செய்மதி நகர்வு ஒழுங்கு (Satellite Navigation System) என்று கூறப்படுகின்றது. அதாவது செய்மதிகள் வானவெளியில் புவிவட்டப் பாதையில் (Orbital Path) நிறுத்தப்பட்டு புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றும் வண்ணம்.செயற்படுத்தப்பட்டுள்ளன. இவை நிலத்தில்



பொருத்தப்பட்டுள்ள அவதானிப்பு நிலையங்கள் (Ground Stations) மற்றும் செய்மதியில் இருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளுகின்ற வாங்கிகள் (Recovers) ஆகியவற்றின் துணையுடன் இடைநிலை (Position) தொடர்பான தகவல்களை துல்லியமாகக் காட்டும் ஒரு முறைமையாகும்.

## GPS இன் தொழிற்பாட்டுக் கூறுகள்

புவி மேற்பரப்பில் எவ்விடத்திலும், எந்த வேளையிலும் தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் GPS தொகுதி செயற்படுகின்றது. இதில் மூன்று பிரதானமான கூறுகள் காணப்படுகின்றன. அவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. விண்வெளிக் கூறு (Space Segment)



2. கட்டுப்பாட்டுக் கூறு (Control Segment)



3. பயன்பாட்டுக் கூறு (User Segment) ஆகியனவாகும்.

விண்வெளிக்கூறு என்பது வான வெளியில் GPS தொகுதியின் செயற்பாட்டுக்காக மிதக்க விடப்பட்டு பூமியை வலம் வருகின்ற 32 செய்மதிகளின் கட்டமைப்பு ஆகும். ஒவ்வொரு சுற்றுவட்டப் பாதையிலும் 4 செய்மதிகள் வீதம் 24 செய்மதிகள் செயற்பாட்டில் இருந்து கொண்டிருக்கும். ஒரு செய்மதி பூமியை சுற்றி வர 12 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றது. கட்டுப்பாட்டுக் கூறு என்பது விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செய்மதிகளின் பாதை, நேரம் அதன் செயற்படுதன்மை ஆகியவற்றை அவதானித்து சரியான ஒழுங்கில் செயற்படுத்துகின்ற கட்டமைப்பாகும். இதற்கென பிரதானமான கட்டுப்பாட்டு நிலையம் ஒன்றும், ஐந்து அவதானிப்பு நிலையங்களும் இதில் இடம்பெறுகின்றன. அடுத்து பாவனையாளர் கூறு மக்களைக் குறிக்கின்றது. வளிமண்டலத்தில், சமுத்திரங்களில், நிலத்தில் பல்வேறு தேவைகளுக்கும் GPS ஐ கையாளுகின்ற மனித குழுக்கள் இதில் அடங்குகின்றனர். மனிதன் GPS மூலம் தகவல்களை சேகரிப்பதற்கு அவரது GPS வாங்கியுடன் செய்மதிகள் எப்பொழுதும் தொடர்புபட்டிருத்தல் வேண்டும். குறைந்தது 4 செய்மதிகளின் தொடர்பு பாவனையாளர் ஒருவருக்கு கிடைக்கின்ற பொழுது அவர் நிற்கின்ற இடத்தின் முப்பரிமாண நிலையை தகவல்களை துல்லியமாக பெற்றுக் கொள்ள முடிகின்றது. (Pratap and Enge, 2012)

## GPS இடை தொழிற்பாடு

GPS தொகுதியின் தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் நிலத்தில் பிரதான கட்டுப்பாட்டுக் கோபுரம் நிறுவப்பட்டுள்ளது. அதனோடு தொடர்புபடும் வகையில் கண்காணிப்பு நிலையங்கள், கோபுரங்கள் உலகின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கூடாக செய்மதிகளின் சுற்றுப்பாதை, நேரம் சரிப்படுத்தப்படும்.

உரு : 03. உலகில் அமைந்துள்ள GPS கட்டுப்பாட்டு நிலையங்களும் அவற்றின் அமைவிடமும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GPS தொகுதியின் செயற்பாட்டில் இவை பிரதானமான பகுதிகள் என்று குறிப்பிடலாம். இதற்கூடாக செய்மதிகள் செவ்வனே இயக்கப்படுவதன் காரணத்தினால் புவி மேற்பரப்பில் துல்லியமான இடைநிலைத் தரவுகள் (Locational data) சேகரிக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு உட்படுத்தப்பட்டு வருகின்றன. மிகத் தொழில் நுட்பத் திறன் வாய்ந்த செயற்பாடுகள் தொடங்கி சாதாரண பாமர மக்களது பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் இதனது ஆற்றல் எந்த ஒரு தொழிநுட்பக் கூறிலும் இல்லாதவாறு ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இன்று எமது பயன்பாட்டில் இருந்துவரும் இத்தொழிநுட்பம் முழுக்க முழுக்க ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தினது (Department of Difence in USA) கட்டுப்பாட்டிலேயே இயக்கப்பட்டு வருகின்றது. அதனது தொழிற்பாட்டை நெறிப்படுத்தும் பொறுப்பு அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்திற்கே உரியதாகும். ஆகவே சகல அதிகாரங்களும் பெற்ற அமைப்பு பாதுகாப்புத் திணைக்களமே ஆகும். அதன் சேவைகளை இலகுவாகப் பெற்றக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் ஏற்ற வசதிகள், வாய்ப்புக்கள், மற்றும் நுட்பங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**GPS இன் பிரயோகங்கள்**

GPS ஊடான பிரயோகங்கள் வரையறையற்றவை. சாதாரண மக்களின் அன்றாடச் செயன்முறைகள் தொடங்கி அறிவியல், ஆராய்ச்சிகள், விவசாயம், காட்டியல், புவிச்சரிதவியல், நீரியல், சூழல், படவரைகலை, போக்குவரத்து, காலநிலை, இராணுவம், மருத்துவம், வர்த்தகம், என பல்துறை சார்ந்து விஸ்தரித்துக்கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது. ஆகவே புவி மேற்பரப்பில் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும், திட்டமிடுவதற்கும் ஏற்றதொரு கருவியாக GPS தொழிநுட்பம் விளங்குகின்றது. குறிப்பாக இன்று போக்குவரத்தைப் பொறுத்தவரையில் அனைத்து மட்டத்திலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வீதிப் போக்குவரத்துகள், விமானப் போக்குவரத்துக்கள், கடல்வழிப் போக்குவரத்துக்கள், அனைத்திலும் அவசியப் பொருளாக ஜீபிஎஸ் கட்டமைப்பு மாறியிருக்கின்றது. ஜீபிஎஸ் இடைநிலைத் தரவுகள் மட்டுமன்றி புஜீ இல் பிரயோகிக்கப்படுகின்ற அனைத்து தரவு வடிவங்களையும் மேற்பரப்பிலிருந்து திரட்டுமளவுக்குத் திறன் படைத்தாகக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

ஜீபிஎஸ் ஐ பொறுத்தவரை அதனது பயன்பாடானது ஒவ்வொரு தனி மனிதனையும் சென்றடையத்தக்க வகையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஜீபிஎஸ் வாங்கிகள் தொடங்கி சாதாரண கையடக்கத் தொலைபேசிகள் வரை அதன் திறன் அமைந்துள்ளதைக் காணலாம். அந்தவகையில் புவியின் மேற்பரப்பில் பூகோள நிலையம் சார்ந்து பல்வேறு தகவல்களை துல்லியமாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அனைவருக்கும் சமமாக இன்றைய நவீன உலகில் திறந்து விடப்பட்டுள்ளது. அதனை மனித சமுதாயம் எந்தளவுக்கு பயன்படுத்தி பயன்பெறுகின்றது என்பதுதான் கேள்விக்குரியதாக உள்ளது.

நம்முடைய சிறு பலவீனங்கள் கூட நம் வாழ்வை வீணாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாடு

"முப்பது கோடி முகமுடை யாள் உயிர்
மொய்ம்புற நன்றுடையாள் - இவள்
செப்பு மொழி பதி னெட்டுடையாள் - இவள்
சிந்தனை ஒன்றுடையாள்" என்ற மகாகவி பாரதி வாக்கு

மக்கள் தொகை பெருகி, தனி நாடு தனி மொழி என்று உரிமைக் குரல், அடிக்கடி எழுந்து கொண்டிருக்கும். இன்றும் கூட இந்த ஒருமைப்பாட்டுணர்வு முற்றாகக் குடிபோய் விடவில்லை. இவ்வுணர்வு என்னும் இழையினை அறுந்துவிடாது காத்து வருவது இந்துப் பண்பாடேயாகும்.

பண்பாடு என்ற தமிழ்ச் சொல் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே தான் உருவாயிற்று. இச் சொல்லினை தமிழுக்கு ஆக்கியளித்தவர் இரசிகமணி பி.கே. சிதம்பரநாத முதலியார் ஆவார்.

